REGISTER No. M. 120.

ओं.

# JNÂNA BODHINI,

## *A TAMIL MAGAZINE AND REVIEW,*

DEVOTED MAINLY TO

LITERATURE, SCIENCE, PHILOSOPHY & RELIGION.

EDITOR:

M. S. PURNALINGAM PILLAI, B.A.

**Vol. VII. No. 9—September 1904.**

CONTENTS.

PAGE.

1. THE INDIAN UNIVERSITIES' ACT.
2. ORIGINAL ARTICLES:—
   1. The Argument of Kundalakesi **M. V. Minakshisundram**
   2. The Insight of Kamban......**T. Shanmugham Pillai** 289
   3. On Hygiene II. **T. Chelvakesavaraya Mudaliar, M.A.** 291
   4. Sarasvathi—A Novel.......**V. Muthukumarasami, B.A.** 298
   5. Chulamani—A Drama...........**V. K. Rangachariar** 306
   6. The unchanging East......**T. A. Ramalingam, B.A.** 310
3. RECENT TAMIL LITERATURE.............................. 314
4. DEPARTMENTAL NOTES:—
   Agricultural, Industrial and Educational.....................316
5. PERIODICAL LITERATURE:—
   Which is greater, Learning or Experience?.................318

*Madras:*

THE MADRAS LITERARY BUREAU,

8, UMPHERSON STREET, B. T.

1904.

Thompson & Co., Printers, Madras.

THE

# Madras Literary Bureau.

**OFFICE:**

**8, Umpherson Street, Black Town, Madras.**

**PATRONS:**

Diwan Bahadur The Hon'ble Justice Sir S. Subramania Aiyar, K.C.I.E., F.M.U.

Diwan Bahadur P. Rajarathna Mudaliar, C.I.E., F.M.U.

T. Vedadrisadasa Mudaliar, Esq., Retired High Court Judge of Travancore.

**Honorary Corresponding Members:**

T. Ramakrishna Pillai, Esq., B.A., F.M.U., F.R.H.S.

G. Subramania Iyer, Esq., B.A.

J. M. Velu Pillai, Esq., F.M.U.

V. Kanakasabhai Pillai, Esq., B.A., B.L.

T. Balasundara Mudaliar, Esq.

**SECRETARY:**

K. C. Duraisami, Esq.

**REPRESENTATIVES:**

Throughout Tamil Districts.

**ORGAN:**

The 'Jnana Bodhini' (ஞானபோதினி).

(A Tamil Monthly Magazine and Review, mainly devoted to literature, Science, Philosophy and Religion).

The *Madras Literary Bureau* has the following separate Departments:

1. Printing and Editing.
2. Translation.
3. Newspaper.
4. Contribution.
5. Copying and
6. General Agency.

The '**Bureau**' edits and prints Books, &c., for authors and publishers; passes proofs through the press.

The '**Bureau**' purchases Tamil MSS. of Romance, Novel, Fairy Tales and Detective Stories for publication.

The '**Bureau**' undertakes to translate all kinds of works into Tamil.

The '**Bureau**' is quite prepared to take Sale and Sole Agency of Books.

## SOME PRESS NOTICES.

"Madras, misnamed the Benighted Province, has once again taken the lead in the establishment of an institution, which, supplying a great want in other parts of the civilised world, has singularly enough not been hitherto known in India. We welcome the attempt of our Madras compatriots to start a Literary Bureau in their midst. It is to consist of six separate departments, of which *the Translation and the Contribution Department and the General Agency may be useful even to people in other parts of the land.* We heartily wish the 'Bureau' every success."—*The Citizen,* Allahabad), 23rd May 1904.

# ஞானபோதினி

"மதராஸ் லிடரரி பூரோ" விலிருந்து வெளிப்படும்

## மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

தாமின் புறுவ துலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்—திருக்குறள்.

சம்புடம் VII. } 1904-ம் ஹூ செப்டம்பர்மீ { புத்தகம் 8.

## THE INDIAN UNIVERSITIES ACT.

## இந்திய சர்வகலாசங்க மசோதா.

இம்மசோதாவானது சென்ற மார்ச்சுமாசம் இந்திய சட்ட நிரூபணசபையில் ஏற்படுத்தப்பட்டவிஷயம் நம்மன்பர் எல்லோருக்கும் தெரிந்தவிஷயமே. அம்மசோதா சர்வகலாசங்க ஆட்சியை முற்றிலும் மாற்றி யிருக்கிறது. இப்போது இருக்கும் சர்வகலா சங்க அங்கத்தினர்வெறும் மரியாதைப்பட்டம் பெற்றவர்களாகிறார்கள். உண்மையில் சர்வகலாசங்க ஆட்சிக்காக சென்னை, கல்கத்தா, பம்பாய் இவைகளில் ஒருநூறு அங்கத்தினரும், அல்லகபாத், லாகூர் இவைகளில் எழுபத்தைந்து அங்கத்தினரும் சேர்ந்த புதுச்சங்கங்கள் ஏற்படப்போகின்றன. இவ்வங்கத்தினர் இதுவரைபோல் ஆயுள்வரை தங்கள்ஸ்தானத்தை வகிக்காது, ஐந்து வருஷங்களுக்கே அவற்றிற்குரியராவர். ஆகையால் பிரதி ஐந்து வருஷங்களுக் கொருமுறை ஒரு புது சங்கம் நியமிக்கப்படும். இச்சங்கத்தின் உட்சபை (Syndicate) க்கு முன் இருந்ததைவிட அதிகமான அதிகாரங்கள்

கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதில் ராஜதானிப் பிரதம வித்தியா உத்தியோகஸ்தர் (Director of Public Instruction) ஒரு அங்கத்தினராக எப்போதும் இருக்க வேண்டும். புதுப் பள்ளிக்கூடங்களைச் சர்வகலா சங்கத்தோடு சேர்த்துவதிலும் முன் சேர்த்திருப்பவைகளைத் தள்ளி விடுவதிலும் ராஜாங்கத்தாருக்கு முன்னிருந்ததை விட அதிகமான அதிகாரம் கிடைத்திருக்கிறது. இதனாலும், ஐந்து வருஷத்துக்கொருமுறை சங்கத்தினரை நியமிப்பதில் மிகப் பெரும் பான்மையோர் ராஜாங்கத்தாராலேயே ஏற்படுத்தப்படுவார்களாதலாலும் இம்மசோதா ராஜாங்கச் சார்பானது என்று பலர்கூறுகிறார்கள். அதுவாஸ்தவமே. ஆனால் ராஜாங்கத்தார் நமக்குக்கெடுதல் செய்வதன்பொருட்டே இம்மாதிரி மாறுதல்களைச் செய்வித்தார்களென்று நாம் இப்போது சொல்லுதல்தப்பு. இனிமேல் இவர்கள் இம்மசோதாவைக்கொண்டு என்ன செய்யப்போகிறார்கள் என்று பார்த்தபின்னரே நாம் அவ்விதமாகச்சொல்ல வேண்டும். இம்மசோதாவில் முக்கியமான இரண்டு விஷயங்கள் வேறுள. அவை தாம் சங்கத்தாருக்கு சங்கத்துக்கென்று வித்வான்களை நியமித்துப் பிரசங்கம் புரிவித்தல், சங்கத்துக்காக ஒரு பேனாட்டுக் கலைஞான சாலை (Laboratory) நிருமித்தல்; இவைஇரண்டும் மிகநல்லனவென்பதிலையமில்லை.

---

சென்றவாரத்தில் சென்னையில் இம்மசோதா இம்மாசம் முதல் விமரிசைக்குவருமென்று குறிக்கப்பட்டிருக்கிறது. அங்கத்தினர் நியமன விஷயமாயும் விதிகளேற்படுத்தப்பட்டிருக்கின்றன. பழையசங்க அங்கத்தினர் 5 அங்கத்தினரையும் பழைய சங்கப்பட்டம்பெற்றோர் (Gradutes) 5 அங்கத்தினரையும் நியமிக்கவேண்டுமென்று குறிக்கப்பட்டிருக்கிறது. நாளது ஸ்ரீ 17உயன்று பழைய தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர்மெசர்ஸ் A.பெரியசாமிமுதலியார், M. R. ராமகிருஷ்ணய்யர், P. S. கணபதிஐயர், A. சீதாராமையர், V. C. தேசிகாசாரியர் ஆகிய ஐவரையும் சங்க அங்கத்தினராகத் தேர்ந்தெடுத்தனர். அதைக் கவர்னர்பெருமானும் அங்கிகாரம் செய்துகொண்டனர். சங்க அங்கத்தினரெல்லோரும் நியமிக்கப்பட்ட பின் அவர்கள் ஏற்படுத்தும் விதிகளைப்பார்த்து மசோதாவைப் பற்றிய நம் அபிப்பிராயத்தை மற்றொருமுறை வெளியிடுவோம்.

# THE ARGUMENT OF KUNDALAKESI.

## குண்டலகேசியின் விருத்தாந்தம்.

இது பஞ்சகாவியங்களில்ஒன்று. சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, குண்டலகேசி, வளையாபதி என்னும் ஐந்துமே பஞ்ச காவியங்களெனப்படுபவை. இவற்றுள் முதன் மூன்றும் அச்சேறி வெளியுலாவுகின்றமையால் யாவரும் அவற்றைப்படித்துக் கருத்துக்கதை முதலியவற்றை எளிதில் அறிந்துகொள்ளலாம். குண்டலகேசி, வளையாபதியோ, அப்படியன்று. அச்சிடப்படாததுஒன்று மட்டுமல்ல, ஏட்டுப்பிரதிகள்கூடக் கிடைப்பதில்லை. சிற்சில இடங்களில் ஏட்டுப்பிரதிகள் இருக்கின்றனவெனக் கூறுகின்றனர். ஆனால் வெளிவருவதில்லை. இந்நூல்கள் இறந்துபட்டனவோ என்று சந்தேகிக்கக்கூடிய நிலைமையில்தானிருக்கின்றன. ஆகையால் அநேகருக்கு அந்நூல்கள்இருப்பதே தெரியாமலிருப்பது ஆச்சரியமாகாது. பெருமைவாய்ந்த இந்நூல்கள் நமக்குக் கிடைப்பதரிதேனும் அவற்றின்கதைகளை அறிந்துகொள்வதற்கு ஒருமார்க்கமிருக்கின்றது. அதற்காக நாம்சந்தோஷப்படவேண்டிய தவசியமே. சூடாமணிப்புலவரியற்றிய வைசியபுராணத்தில் பஞ்சகாவியங்களின்கதைகளும் சுருக்கமாகக் கூறப்பட்டிருக்கின்றன. அப்புராணத்தின் 35 வது படலஆரம்பத்தில் "நேரார்குண்டல நேசிப்பேர் நெடுநூலின் சீருரைத்தாம்" என ஆசிரியர்கூறியுள்ளாராதலின் 34வது படலத்திற் செப்பியகதை குண்டலகேசியின்கதைபோல விளங்குகின்றது. 31, 32, 33-வது படலங்களில் சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலைகளின் கதைகள்முறையே கூறப்பட்டிருக்கின்றன. 35-வது படல இறுதியில் அருமையான வைங்காவியந் தன்னிலே உரியவிக்கதைக் காவிய மொன்றரே." எனவும் கூறியிருக்கின்றது. ஆகலின் 35-வது படலத்தில் கூறப்பட்டுள்ளகதை வளையாபதியின் கதையே என்பதிற் சிறிதும் ஐயமில்லை. இனிக் குண்டலகேசியின் கதையைச் சுருக்கமாகக் கூறுவாம்:—

இராஜாதிராஜனெனசோழனும்பெயர்பெற்ற வக்குவன் வம்சத்திற் பிறந்த காவேரியும் வெகுநேசமாக இருந்தார்கள். ஒருவரையொருவர்பிரிந்திருக்க அவர்கள்மனம் சகியாது. இவ்விருவர்களும் கற்ற

வர்களால் மெச்சப்படும் மேம்பாட்டினையுடைய 64 - கலைகளையும் மற்றும் பலசாஸ்திரங்களையும் முற்றுமே குற்றங்குறைகளின்றிக் கற்றுணர்ந்தவர்கள். இகபர ஞானங்களைப்பற்றிக் கூறும்நூல்களை முற்றும் உணர்ந்தவனும் தனக்கு நிகர்எவனுமிலன்என்ற எண்ணத்தால் கர்வங்கொண்டிருந்தவனுமாகிய பாண்டியன் அப்பொழுது அயல்நாட்டில் அரசுசெலுத்திவந்தான். இப்பாண்டியன் பந்தாட்டத்தில் தனக்குள்ள தேர்ச்சியை மிகவும்பெரிதாகஎண்ணி அவ்வாட்டத்தில் தன்னை வெல்ல எவராலும்முடியாது என்று தன் வெற்றிக்கொடியில் சித்திரித்து நாட்டியதுந்தவிர, தன்னோடு யாவர்வந்து பந்தயங்கூறினும் அவருடன் பந்தாடுவதற்குத் தான்சித்தனாயிருக்கிறதாகவும் தெரிவித்திருந்தான்.

அகளங்கசோழனும் தன்னுடைய பராக்கிரமத்தை மிகமதித்துத் தன்சேனைகளையெல்லாம் அணிவகுத்து தன்னை ராஜாதிராஜன் என்று ஏற்றுக்கொள்ளாத சிற்றரசர்களைச் செயித்துவாருங்கள் என்று சேனாதிபதிகளுக்குக் கட்டளையிட்டனுப்பினான்.

இதையறிந்த பாண்டியராஜன் தன்னுடைய கட்டியக்காரனையழைத்து நீ சோழராஜனிடம்போய் "ஓ சோழா ! நீயும் நானும் உண்மையாகவே மிகவும் பெருமையுடையவர்கள். நமக்குச்சமானமானவன் எவனுமில்லை. நாமிருவருந்தான் ஒருவர்க்கொருவர் முரண்செய்துக் கொள்ளத்தகும். அப்படியிருக்க நாமேன் ஒருவரையொருவர் எதிர்த்து யார்பெரியவரென்பதை நிச்சயித்துக்கொள்ளக்கூடாது? சாதாரணமாக ஒருவன் யோக்கியதையை அறிவதற்கு ஏதுக்களான யுத்தம், கல்வி முதலியனவெல்லாம் அவ்வளவு சிலாக்கியமானவையல்லவாகலின் அவைகளைநீத்து, பெருமையுடைய பந்தாட்டத்தில் என்னை எதிர்ப்பாயாக. இப்பந்தயத்தை நீ ஒப்புக்கொண்டால்சரி, இன்றேல் நீ ஒருபெருமையுடைய அரசனன்று" என்னும் சமாசாரத்தை நான்சொல்லியதாகச் சொல்" "என்று ஆஜ்ஞைதந்தனுப்பினான். கட்டியக்காரனும் சோழனிடம் சென்று பாண்டியன் கூறியமொழிகளைக் கூறிமுடித்தான். இதைக்கேட்கவே சோழனுக்குக் கோபம்அதிகரித்தது. உடனேமந்திரிகளை யழைத்து நான்காலதாமதமின்றி மதுரைக்குப்போய் துஷ்டனானபாண்டியனுடையகர்வத்தைப் பங்கப்படுத்தவேண்டு மாகையால் என்பிரயா

ணத்திற்கு வேண்டியவைகளை யெல்லாம் வெகுசீக்கிரமாக ஆயத்தப் படுத்தவேண்டுமென்று அவர்கட்குக் கட்டளையிட்டான். அப்பொழுது அவ்விடத்திலிருந்த காவேரி உடனேஎழுந்து அரசனைவிளித்து "ஓரரசன் அயலரசனது நாட்டிற் பிரவேசித்தல் தனதுகண்ணியத்திற்கும் புகழுக்கும் தக்கதன்று. பாண்டியனை பங்கப்படுத்தவேண்டியது தங்களுக்கிஷ்டமேல் தங்களுடைய ஊழியக்காரனாகிய நான் இப்பொழுதே மதுரைக்குச் சென்று அவனுடையதென்றே சொல்லும்படியான அப்பந்தாட்டத்திலேயே அவனை வென்று அச்சந்தோஷசமாசாரத்துடன் வெகுசீக்கிரத்தில் இவ்விடம் திரும்பிவருகிறேன்" என்று செப்பினன். இதைக்கேட்டவுடன் மந்திரிகள் மிகுந்தசந்தோஷத்துடன் அரசனைநோக்கி, "எமையாளும் இறைவ! ஒருபிரஜையினல் ஜெயிக்கப்பட்டகீர்த்தி நியாயமாக அரசனுக்கே உரித்துஎன்று நூல்கள் கூறுகின்றன, ஆகலின் தங்களுக்குப்பதிலாக காவேரியை யனுப்பவேண்டு" மென்று மன்றாடவே, அரசனும் அவர்கள் வேண்டுதலுக்கிசைந்து காவேரியை நோக்கி "நீ மதுரைமாநகர் சென்று பாண்டியனைவென்றுவருவாயாக" என்றான். உடனேகாவேரி வீரத்தன்மை பொருந்திய ஏராளமான போர்ச்சேவகர்களுடன் புறப்பட்டு மதுரையம்பதி போய்ச்சேர்ந்து தன் வரவைப் பாண்டியனுக் கறிவித்தான். பாண்டியனும் காவேரியை தக்க மரியாதையுடன் அழைத்து க்ஷேம சமாசாரங்களை வினவிப் பின்னர் "நீர் இவ்விடம்வந்த தெதன்பொருட்டு" என உசாவினன். காவேரி தான் சோழனல் பாண்டியனுடன் பந்தாடுவதற்கு அனுப்பப்பட்டமையால் மதுரைக்கு வந்ததாகவும் அதைத்தவிர வேறுகாரியம் ஒன்றுமில்லை யென்றும் கூறினன். உடனே பாண்டியன்கோபித்து வைசிய குலத்திற்பிறந்த காவேரி க்ஷத்திரியகுலத்திற் பிறந்து அரசுபுரியும் மன்னவனுக்கு நிகரான எதிரியல்ல வாதலால் அவனோடுபந்தாட மாட்டேனென்று கூறவே காவேரி பாண்டியனை நோக்கி "பாண்டிநாடாளும் பார்த்திப! நீர் உமது வெற்றிக்கொடியில் பந்தாட்டத்தில் உம்மைவெல்ல எவராலுமுடியாது என்று சித்திரித்து நாட்டியதுந்தவிர, யார்வேண்டினும் அவ்வாட்டத்தில் உம்மைஎதிர்க்கலாமென்றும் தெரிவித்திருக்கிறீர்! ஆகலின் இப்பொழுது உம்மையாவர் எதிர்த்திடினும் அவரோடு பந்தாடுதற்கு நீர் இசையவேண்டுமன்றோ" எனக் கேட்க, அரசனும் வெட்கி அதற்கி

சைந்து தம்மிருவருடைய சாமர்த்தியத்தையும் அறிவதற்கு ஒருநாள் ஏற்படுத்தி மத்தியஸ்தர்களையும் நியமித்தான். அப்பொழுது ஒவ்வொருவனும் அளவற்ற திரவியத்தையும் விலையுயர்ந்த பொருள்களையும் பொதுக்கட்டி அவை கெலிப்பவனுக்குக் கிடைக்கவேண்டிய பரிசு எனப் பந்தயம் பேசிக்கொண்டார்கள்.

குறித்தநாளும் ஏற்பட்டு ஆட்டமும் ஆரம்பிக்கப் பட்டது. பாண்டியராஜனும் காவேரியும் பந்தயத்திற் றேர்ந்த குதிரைகளின் மீதேறிக்கொண்டுஇப்புறமும் அப்புறமும் ஓடி ஓடிப் பந்தையடித்தார்கள். ஆட்டத்தில் இருவர்களும் சமமாகவே இருந்தபடியால் வெற்றிஇன்னார்க்கென்று நிர்ணயிக்க முடியாமலிருந்தது. காலங்கழிந்தும் ஆட்டம் முடிவதாகத்தோன்றவில்லை. சிறிதுநேரம்சென்றபின்னர் பாண்டியன் "இவ்வாட்டத்தை நிறுத்தி மற்றோராட்டத்தில் நம்சாமர்த்தியத்தைப்பரீக்ஷிப்போ"மென்று சொல்ல காவேரியும் சம்மதித்தான். அவ்வாட்டமும் ஆரம்பித்தார்கள். ஒரு சதுரக்குளக்கரையிலிருந்து குறுக்கே ஒருபந்தை யெறிய அது எதிர்க்கரையில் நிலத்தில் விழுமுன்னே குளத்தைசுற்றிக் குதிரைமேற் சவாரிசெய்து அப்பந்தை அடிக்கவேண்டியதுதான் அவ்வாட்டம். இதில் பாண்டியன் மிகவும் தேர்ச்சியுடையவனானதால் காவேரியை வென்றுவிடலா மென்று உறுதியாய் நினைத்திருந்தான். பந்து எறிந்தாய்விட்டது. உடனே காவேரி பாண்டியனைக்காட்டிலும் அதிவேகமாய் யாவரும் ஆச்சரியப்படும்படியான சாமர்த்தியத்துடன் சவாரிபோய் பந்தையடித்துவிட்டான். ஆகலின் காவேரியே வெற்றியடைந்தான். மத்தியஸ்தர்களும் அவ்வாறே தீர்மானித்தார்கள். அகந்தையுடைய பாண்டியனுக்கு தனது தோல்வியை ஒப்புக்கொள்ளவேண்டி நேர்ந்ததுந்தவிர தான்பந்தயங்கட்டிய திரவியம் பொருள்முதலியவற்றை யெல்லாம் காவேரிக்குக் கொடுக்கவும் நேர்ந்தது. வெற்றியின் கீர்த்தியையும் தான் பாண்டியனிடமிருந்து பந்தயத்தால் ஜெயித்த திரவியம்முதலியவற்றையும் தனது நண்பனும் மன்னவனுமான சோழனுக்குச் சேர்ப்பிக்கவேண்டு மென்னும் அவாமேலீட்டால் காவேரி மதுரையைவிட்டு சோழதேசம் செல்லுகையில் இரவைப்போக்குவதற்குஒரூரில் இறங்கினான்.

இத்தருணத்தில் இதுகாறும் சேரனுடன் சண்டைசெய்து கொண்டிருந்த பாண்டியன் சேனபதியாகிய கவுந்தையன் மதுரைக்குத்திரும்பிவந்து சமீபத்தில் நேர்ந்த தோல்வியால் மனவியாகூலப்பட்டிருந்த தன் மன்னவனனையணுகி " ஓகாவல! காவேரியைப் பின்றொடர்ந்துபோய் அவனுடன் போர்புரிந்து அவன் கைப்பற்றிக் கொண்டுபோன திரவியம், சேனை, கன்னியம், கீர்த்திமுதலியவற்றை யெல்லாம் மீட்டுக்கொண்டுவர எனக்குஉத்தரவு கொடுக்கவேண்டும் என மிகவும் வணங்கிக்கேட்டான். பாண்டியன் இவ்வார்த்தைகளைக் கேட்டவுடனே தனக்குச்சிறிது முன்புநேரிட்ட அவமானம்நீங்கி விடுமென்ற எண்ணத்துடன் கவுந்தையனுக்கு அவனிஷ்டப்படி உத்தரவுகொடுத்தான். அவன் உடனே மிகுந்தசேனையுடன் காவேரியைப் பின்தொடர்ந்துபோய் அவனோடு சண்டைதொடுத்தான். சண்டை மிகவும் உக்கிரமாக நடந்தது. கடைசியில் இருதிறத்தாருடை சேனைகளும் பக்கத்தில் நெருங்கின. பாண்டியன் சேனை தோல்வியுற்றது. காவேரி கவுந்தையனோடு மற்போர்புரிந்து ஒரே அடியில் அவன்தலையைத்துண்டித்துக் கீழேவீழ்த்தினன். ஆதலால் பின்னுமொரு முறை காவேரியே வாகையணிந்தான்.

பிற்பாடு கவுந்தையன் தலையைத்தனது வெற்றிக்குறிகுறியாக எடுத்துக்கொண்டு காவேரி சோழதேசம் புறப்பட்டான். கவுந்தையன் மனைவியான அரம்பையாதிபை என்பவள் தன்கணவன் இறந்த செய்தியைக்கேட்டுஅதிகவிசனத்துடன் காவேரியைப் பின்றொடர்ந்து தான்மிகவும் நேசித்திருந்த தனது தலைவனுடைய தலையைத்தனக்குத்தரவேண்டுமென்று மிகவும் இரங்கிக்கேட்டனள். காவேரி அவளது நிலைமையைப்பார்த்து பரிதாபப்பட்டபோதிலும் அவள்கணவன் தலைநியாயமாகச் சோழனுக்குச்சேர்ந்த பொருளாதலால் தனக்கு அதைத் தருவதற்குச் சுதந்தரமில்லையென்றும், ஆனல் அவள் தன்னுடன்சோழதேசஞ்சென்றால் அரசனிடம் அவள் முறையைத்தானேகூறி கவுந்தையன் தலையை வாங்கித்தரக்கூடுமென்றும் உறுதியாகச் சொன்னான். அரம்பையாதிபையும் அப்படியே அவனுடன் சோழதேசஞ்சென்றாள். காவேரி தான்முன்கூறியவார்த்தை பிசகாமல் அரசனிடம் அவள் முறையைச்சொல்லி கவுந்தையன் தலையை அவன்மனைவிக்குக் கொடுக்கும்படி யேற்பாடுசெய்தான்.

இக்கதையில் பலவுண்மைகள் பொதிந்துள்ளனவேனும் எவனேயாகிலும் தனக்குள்ள செல்வத்தையும் தேர்ச்சியையுமே மிகப் பெரிதாகமதித்து செருக்கடைவானுனல் அவன் சீக்கிரத்தில் கெடுவான் என்னும் உண்மையே வாசிப்போர் யாவர்க்கும் வெள்ளிடைமலைபோல் தெள்ளிதிற் புலப்படும்.

M. V. மீனுக்ஷிசுந்தரம்.

---

## புஸ்தக விளம்பரம்.

1. இரசாயனசாஸ்திரம். சிறுவர் சிறுமிகளுக்கேற்றது. விலை அணு 6
2. சத்தியவிஜயம் அல்லது அரிச்சந்திரன் கதை. நேர்த்தியானது. ,, அணு 4
3. விக்டோரியா மெய்க்கீர்த்தி. இங்கிலீஷ் தமிழ். ,, அணு 12
4. தென்னுட்டுச்சிரேட்டர்கள். முதற்பாகம். ,, அணு 12
5. பன்னிரு பெண்மணிகள். திவ்விய புத்தகம். ,, அணு 6

வேண்டுவோர் சென்னையிலிருக்கும் மதராஸ் லிடரரிபூரோ செக்ரடரிக்கு எழுதிக்கொள்ளவும்.

## மதராஸ் லிடரி பூரோ.

---

### தென்னுட்டுச் சிரேட்டர்கள்.

**(இரண்டாவது பாகம்.)**

தயாராகிவிட்டது. சீக்கிரத்தில் வெளிப்படும். இதிலே திருமணம் வேதாத்திரீசதாச முதலியார், நாவாப் சர் சாலர்ஜங், பூண்டி-அரங்கநாத முதலியார், காஜுலு லக்ஷ்மீ நரசு செட்டியார், சர் குமரபுரம் சேஷாத்திரி ஐயர், இராஜதர்மப் பிரவீணர் T. R. A. தம்பு செட்டியார் இன்னேரன்ன ஜீவிய சரித்திரங்கள் அடங்கி யுள்ளன. படங்களும் உண்டு.

விலை அணு 12. வேண்டியவர்கள் செக்ரடரிக்கு எழுதவும்.

# THE INSIGHT OF KAMBAN I.

## கம்பசூத்திர விபேதனம்.

### பாலகாண்டம்-சிறப்புப்பாயிரம்.

1. உலகம் யாவையும் தாமுள வாக்கலு
நிலைபெ றுத்தலு நீக்கலு நீங்கலா
அலகி லாவிளை யாட்டுடை யாரவர்
தலைவ ரன்னவர்க் கேசர ணங்களே.

(இ-ள்) எல்லா வுலகங்களையும் படைத்தலும் காத்தலும் துடைத்தலு மொழிபாக அளவு கடந்த விளையாட்டுடையார்யாவர் அவரே முதற்கடவுளா வார்; அவரையே யாம் புகலடைவோம். எ-று

குறிப்பு:—இது முழுமுதற் கடவுள் சொரூப விலக்கண முணர்த்திய வாறு. உம்மை நான்கின் முன்னது முற்று, ஏனைய எண்ணுப் பொருளன. ஆக என்னுஞ் செயவெ னெச்சத் தகரந் தொகுத்தல் பெற்றது. முழுமுதற் கடவுட்கு முத்தொழிலும் பிறவும்விளையாட்டாகலின் ஆக்கலும்நிலைபெறுத்தலு நீக்கலு நீங்கலாக அலகிலாத விளையாட்டென்றார்; பெறுவித்த லென்புழிப் பிறவினை விகுதி தொகுத்தல் பெற்றது. இதனைக் 'குடிபொன்றிக் குற்றமு மாங்கேதரும்' என்புழிப் பரிமேலழகர் பொன்றி யென்பதனைப் பொன்றச் செய்தென விரித்ததனை மறுத்து வ்விகுதி தொகுத்தலெனக் கூறுதலா னுமுணர்க. படைத்தல் காத்தல் துடைத்தலே யன்றி அவனது விபவாவதா ரங்களிற் செய்த பேராற்றலைத் தொகுத்து நீங்கலாக அலகிலா விளையாட் டென்றதென்க. சருவம் விஷ்ணுமயம் சகத் தென்பதனுல் உலகம் யாவை யுந் தாமென்றும், அவனுக்கு முத்தொழி லுடைமையான் உளவாக்கலு நிலை பெறுத்தலு நீக்கலு மென்றும், அவன் இவற்றையென்று நடத்தலின் நீங்க லாத அலகிலாத விளையாட்டுடையா ரென்றும், தொழிலை யுணர்த்திற்றென் றுங் கூறுவது மொன்று. நிலைபெறுத்த லொருசொல். யாவர்சொல்லெச் சம்.

2. சிற்கு ணத்தர் தெரிவரு நன்னிலை
எற்கு ணர்த்தரி தெண்ணிய மூன்றனுள்
முற்கு ணத்தவ ரேமுத லோரவர்
நற்கு ணக்கட லாடுத லன்றரோ.

(இ-ள்) ஞானகுண முடையார் அறிந்தநன்மையாகிய நிலைமையை என் னுலறிவிப்பதரிது; எண்ணப்பட்ட முக்குணங்களினு முதற்குண முடையா

ரே முதற்கடவுள் ; அவரது நற்குணமாகிய குணானுபவத்தி லமிழ்ந்தி விடுதலே நன்று. எ-று

குறிப்பு:—சித்தென்பது திரிந்து நின்றது. ஞானகுண முடையராவார் மயர்வற மதிநல மருளப்பெற்ற ஆழ்வார் தொடக்கமானவரை; அவரே 'கண்டேன் கண்டேன் கண்டேன் கண்ணுக்கினியன கண்டேன்' என்றும், 'திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன்' என்று மருளிச்செய்தலானுமுணர்க. இனித் தெரிவரு மென்பதற்குத் தெரிய வருமையான எனப் பொருள் விரிக்கின் மேற்கூறியதற்கு மாறுகலின் பொருந்தாமை யறிக. எண்ணிய வென்பது செயப்பாட்டு வினை செய்வினைபோற் கூறப்பட்டது. இதனை 'இல்வாழ்வா னென்பான்' என்புழி என்பா னென்பதற் குரைத்தாங்கறிந்தமைக்க. எற்குகன்னு நான்காவது மூன்றுவதன் கருத்தாப் பொருளது. முக்குண மென்பன சாத்துவிகம், இராசதம், தாமதமென்பன. மூன்று தொகைக் குறிப்பு. நன்னிலை மயர்வறு மதிநலத்தை. ஏகாரம் பிரிநிலை. அரோ அசைநிலை. இது உடாயங் கூறியவாறு. இவ்வாறு கொள்ளாது குணத்தை யுணர்த்தியதாகக் கூறுவாறுமுளர். அது சரமபீட்டைக் குறித்தன்மையிற் பொருந்தாமைகாண்க.

3. ஆதி யந்த மரீயென யாவையும்
ஓதி னூரல கில்லன வுள்ளன
வேத மென்பன மெய்ந்நெறி நன்மையன்
பாத மல்லது பற்றிலர் பற்றிலார்.

(இ-ள்) அலகில்லனவு முள்ளனவு மாகிய வேதங்களை யெல்லாம் ஆதியினு மந்தத்தினும் அரீயென்றோதி மெய்ந்நெறி நன்மையனாகிய இறைவனது பாதங்க ளல்லது வேறு பற்றிலார் பற்றுடைய ராகார். எ-று

குறிப்பு:—ஆயிர மாமறை என்பவாகலின் அலகில்லன என்றும், மும்மறை என்பவர்களின் உள்ளன என்றுங் கூறியவாறென்க, பெற்றார் சொல்லும் முற்றத்துறத்த முனிவர் சொல்லும் மந்திரமாகக் கொண்டொழுகுபவனாதலின் மெய்யென்றும், மகாராசரத விபீடணாழ்வா னிவர்கட்கு முடிபுனைந்தே யவ ரொன்னலரை வீட்டலின் நெறியென்றும், கண்டாரைத் தன்னழகாற் றுவக்குண்ணச்செய்யு மனக்கினிய படிவமுடைய னாதலின் நன்மைய னென்றுங் கூறினார். ஓதினார்-எச்சமுற்று. வேதத்தை முதலினுங் கடையினும் அரீயென்றோதல் பண்டையோர் வழக்காதலின் ஆதியந்த மரீயென வேதமென்பன யாவையு மோதினாரென்றதென்க. இறைவனை யடைவாரைப் பற்றிலர் பற்றிலா ரென்றது 'அற்றது பற்றெனி லுற்றது வீடு' எனப் பெரியார் பணித்தமையானு மறிக. பற்று என்பது அகப்பற்று, புறப்பற்றைன்பவற்றை. ஆதியந்த மரியன வெனப்பாடமோதி வேறுரைப் பாருமுளர்.

4. ஓசை பெற்றுயர் பாற்கட லுற்ருெரு
பூசை முற்றவு நக்குபு புக்கென
ஆசை பற்றி யறையலுற் றேன்மற்றிக்
காசில் கொற்றத் திராமன் கதையரோ.

(இ-ள்) ஒலி யமைந்த பாற்கடலை யடைந்தொரு பூனை முழுது நக்கப் புக்காற்போல இக்குற்றமற்ற வெற்றியினையுடைய இராமகாதையை ஆசையாற் கூறத் தொடங்கினேன்.எ-று

ஆர்கலி யென்னும் பெயர்பற்றி ஓசைபெற்றுயர் பாற்கடலென்றதென்க. இக்காசில் கொற்றத்திராமன் கதைஎன்ருர் இறையவனதேனைய விபவாவதாரங்களின் வெற்றிபோலாது இலங்கையர்கோன் அயோத்திய ரிறையோடு பொருதுடைந்து நின்ற ஞான்று அவனை இன்றுபோய் நாளை நின்ருனையொடுவாவென்ருற் போல்வது. இதனைப் பேராண்மை யென்னுந் திருக்குறட்குப் பரிமேலழகர் விரித்தலானு முணர்க. இதனைத் தழிஞ்சியென்ப. இவ்வாறே இந் நூலாசிரியரும்.

"ஆளயா வுனக் கமைந்தன மாருத மறைந்த
பூளையாயின கண்டனை யின்றுபோய் பொரற்கு
நாளைவாவென நல்கினு னுகிளங்கமுகில்
வாளைதாவுறு கோசலநாடுடை வள்ளல்"

என இக்கருத்தேபற்றிக் கூறுதல்காண்க. பற்றிமூன்ருவதன் பொருள்படுவவதோரிடைச் சொல். மற்று-அரோ அசை. அறையலுற்றேன் ஒரு சொல்; புக்கெனஎன்புழி ஆல் விகுதி தொகுத்தல் பெற்றது. நக்குபு என்பது காரியப் பொருட்டாதியசெயவெனச்சம்.

தி. சண்முகம் பிள்ளை.

---

# ON HYGIENE II.

## சுகாதாரதருப்பணம்.

---

ஒளி. சருமத்தின்மீது ஒளி படுவது சரீரத்துக்கு ஆரோக்கியத்தைக் கொடுக்கும். தரைமட்டத்திற்ருழ்வாய் ஓதமுமிருளுமான அறையினுள்ளே யிருந்து வேலைசெய்கின்றவர்கள் தமது சரீரம் விளர்த்து வியாதியடைகின்றனர். சருமத்தை ஊடுருவிச்செல்லும் ஒளியானது சருமத்துக்குமாத்திரமேயன்றி இரத்தத்துக்கும் நயத்தைக் கொடுக்கும். அந்நயம் அதன்

வழியாகத் தேகமுழுவதிலுஞ் சென்று செறியும். ஆகையால் வீடுகளும் கல்விச்சாலைகளும் கம்மியர்சாலைகளும் மடைப்பள்ளிகளும் காற்றுத்தாராளமாய் வீசத்தக்கவைகளாக இருப்பதுடன் வெளிச்சம் செம்மையாக பிரவேசிக்கத் தக்கவைகளாகவும் இருத்தல்வேண்டும். பயிர்பச்சை செடி கொடிமுதலிய தாவரங்களுக்குப்போலவே, மனிதருக்கும் சூரியகிரணமானது நன்மையைக் கொடுக்கும். "மரத்தின்கீழாகாமரம்" என்றபடி நிழலிலேயுள்ள பயிர்கள் வளர்ச்சியும் வளமுங் குன்றியிருக்க, சூரியகிரணம் படுவதான வெளியிடத்தில்வளரும் பயிர்கள் செழிப்புற்றுவளர்கின்றன. அங்ஙனமே இருட்டறைகளில் இருப்பவர்கள் வெளுத்து உரங்குன்றியிருக்க, நல்ல வெளிச்சமுள்ள வீடுகளிலிருப்பவர்கள்தேககாந்தியும் உரமும்பெற்று வாழ்வர்.

உழைப்பு:—எடுத்தாளாதபொருள் உதவாது. துலக்காத ஆயுதம் துருப்பிடிக்கும். உழைப்பில்லாதஉடல் உரங்கொள்ளாது. உழவு கைத்தொழில் முதலியவற்றைச்செய்வோர் உடலுரம்பெற்று நோயின்றி பலாட்டிகராக நீடியவாயுள் பெற்றிருக்க, யாதொன்றுஞ் செய்யாமல் சோறுண்டு சோம்பியிருப்பவர் தேகபலமின்றி மெலிந்திருப்பதும் அடிக்கடி வைத்தியரைத்தேடித்திரிவதே உத்தியோகமாக இருப்பதும் பிரத்தியக்ஷம். வாணிபம் இலேகநம் உவாத்திமை முதலாகத் தேகப்பிரயாசையில்லாத ஜீவனோபாயமுடையவர்களும், யாதொருதொழிலுமின்றிப் பிதுரார்ஜிதமான பொருளுதவியால் உண்டுடுத்து நாள்கழிக்கும் சுகஜீவிகளும், கல்விகற்குமாணுக்கர்களும், தாந்தாமுண்டவுணவு சீரணமாகி உடலில் உதிரம்பரவி உறுப்புகளும் நரம்புகளும் உரம்பெறுதற்பொருட்டு, ஏதாவது ஒருவிதத்தில்உழைப்புக்கொள்வது இன்றியமையாதது. சரீரப்பிரயாசை கொள்ளாவிடின் இன்னோரன்னோர் அசீரணம், காச்சல், கைகால்பிடிப்பு, ஸ்தூலம், பாரிசவாய்வு, துர்ப்பலம் முதலியவற்றால் பீடிக்கப்பெறுவர். இவர்களுக்கு ஔஷதங்கள் தத்தத்கால பரிகாரமேயன்றி வேறாகா. இவர்களுக்கு உழைப்பே பரமௌஷதம். இந்தப்பரமௌஷதங் கொள்ளாவிடின் இந்த ரோகங்கள் கஷ்டசாத்தியமும் அசாத்தியமுமான ரோகங்களாகிவிடும். தங்கள் தங்கள் இருப்பிற்கும் வயத்துக்கும் தேகவியற்கைக்கும் ஏற்றபடி, சிலம்பப்பயிற்சி, மல்லயுத்தம், குதிரைசாரி, வெளிக்காற்றில்கானடையாயுலாவிவருதல் துரவுகுளங்களில்நீஞ்சுதல், நந்தவனமுதலியன வைத்துப்பயிரிடல் முதலியவற்றில் எதையாவது இவர்கள் இரண்டுமூன்றுநாழிகைநேரம் தினக்கிரமமாக அனுசரித்துவருதல்வேண்டும். இங்ஙனம் அனுசரிப்பது ஏனையரினும் நகரவாசிகளாவார்க்குப் பின்னும் அவசியம். உலாவிவருதலுக்கு மாலைப்பொழுதினும் காலைப்பொழுதே உத்தமகாலம். சூரியன்அத்தமிக்குங்காலத்தைவிடப் பகற்காலத்தில்வேலைசெய்தலே ஆரோக்கியத்துக்கு ஏதுவாகும்.

சிலம்பமுதல் மல்லயுத்தம் தேசிநடை கொள்ளின்
பலம்பரவு மெய்யிறுகும் பள்ளத்—துலங்குபசி
யுண்டாம் கபவாத மோடுவலி சூலையும்போம்
பண்டா மலமிறங்கும் பார்.

யௌவனபருவத்தில் காளைகள்போல் ஆடியோடி உலாவாமல் எழுது வதும் இருப்பதுமே மகாப்பிரயாசையாக இருப்பவர்கள் விகடமான மன்னார்சுவாமி விக்கிரகங்களே. என்? இவர்களை எடுக்கவும் பிடிக்கவும் உரமான ஆள்கள்வேண்டுமாகையால் இவர்கள் பாரமான சுமைகளே. உண்டவுணவு சீரணியாமையால் இவர்கள் கட்டுச்சோற்றுமூட்டைகளே. உவமையாகுபெயர்க்கு ஒருதாரணமாக இவர்களைக் குதிர்என்று கூறித் தமிழ்ப்புலவர்கள் நம்மை வாதுக்கழைப்பாரோ? யாதொருவினையுமின்றி எழுவாயுருபுகளாக இருக்கும் இவர்களைக் காரகவேதுவாக்கிப் பயனிலைகொடுத்து முடிவுகாட்டாவிடின் நன்னூல்கற்றதனாலாய பயனென்? முத்தகமான இவர்களைக் குளகமாக்குதல்வேண்டும். உண்டுடுத்து எதிர்மறை வினையெச்சமான இவர்களை உடன்பாட்டுத் தெரிநிலை நிகழ்கால எதிர்கால முற்றுவினையோடு முடிக்கவேண்டும், நிலைத்திணைப்பொருளான இவர்களை இயங்குதிணைப்பொருளாக்கவேண்டும்.

ஜீவனத்தின்பொருட்டு உழைப்பவர்களும், தேகசௌக்கியத்தின்பொருட்டு உழைப்பவர்களும், வயது தேகவலிமை முதலியவற்றிற்கு ஏற்றவளவாகவன்றி,அதிகமாக உழைப்புக்கொள்வதும் கெடுதிவிளைக்கும். கல்விகற்பதும் நூல்கள் எழுதுவதும் விஷயசிந்தனைசெய்வதும் வாதஞ்செய்வதுமான மனோவியாபார முள்ளவர்களும், மனத்தை மிகவும் வருத்திஉழைப்பதுங் கெடுதியேயாகும். மனமொழிகளாற் செய்யுந்தொழில்களை அவை வருந்துவதற்குமுன்னே விட்டொழிக. இந்தத்திரிகரணங்களில் ஆதியும் அந்தமும் இதரேதரம். இவ்விரண்டில் ஒன்று ஏறபடியாயின் ஒன்று இறங்குபடியாம். இவ்விரண்டையும் ஏறுமாறின்றி இணைத்துப்பிணைப்பவர்களே எண்ணிய இலக்கை எளிதினெய்துவோராவர். ஏனையோர் வின்னுணற்றவராவர். வாயால்மொழிதலான தொழிலையும் மிதமாகவே செய்க.

மிதவார்த்தைக் குள்ளறிவு மெய்ச்சுகமுங் குன்று
ததிவார்த்தைக் கவ்வுரைகெட் டப்போ—டுதிரமிவை
சுண்டும்பொங் கும்யுத்தஞ் சூழுதலா லையவினை
யண்டும்பெர்ங் கும்புனஞே யாய்.

உண்டி:—அன்னம் ஒடுங்கினல் ஐந்தும் ஒடுங்கும். அன்னமயம்பிராணமயம்; ஊணற்றபோதே படலற்றுப்போம். உண்டவன் உரஞ்செய்வான். உண்டார்மேனி கண்டால் தெரியும். ஊணினுல்யுத்தி (பூணினுல்சாதி)

உணவின் அளவு இவ்வளவு என விறுதிட்டமாக உரைத்தலாகாது. அவரவர் கொள்ளுதலான உணவின்அளவு, அவரவர்உடலின் அளவுக்கும் உடலுரத்தின் அளவுக்கும் உழைப்பின் அளவுக்கும் ஜீரணசக்தியின் அளவுக்கும் ஏற்றதாக இருக்கும். உண்ணும்போது, இன்னும் அவசியமில்லை, 'உண்ட இவ்வளவேபோதும்' என்கிறஉணர்ச்சி ஒவ்வொருவர்க்கும் இயல்பாக உண்டு. அவ்வுணர்ச்சியின் அளவாக உண்பதே மிதமான ஊண். அதுவேஅவரவர்க்கு அவசியமானஅளவு. அவ்வளவுக்கு மிஞ்சினல் அமுதமும் விஷமாகும். 'மீதூண்விரும்பேல்'. 'உண்டிசுருங்குதல் பெண்டிர்க்கழகு'. 'ஊணன் கருமமிழந்தான்' (உலுத்தன் பேரிழந்தான்). அன்னசுரணை அதிகமானல் அக்ஷரசுரணைகுறையும். மட்டானபோசனம் மனதுக்கு மகிழ்ச்சி.

இழிவறிந் துண்பான்க ணின்பம்போ னிற்கும்
கழிபே ரிரையாங்க ணோய்
தீயள வன்றித் தெரியான் பெரிதுண்ணில்
நோயள வின்றிப் படும்.

அளவுக்கதிகமாக உண்பார்க்கு இலங்கணமே பரமௌஷதம்.

இங்ஙனம் அளவாக உண்ணுமிடத்தும் தேகவியல்பு காலவியல்புகளோடு மாறுகொள்ளாதனவும் சுவை வீரியங்களால் தம்முள்மாறுகொள்ளாதனவுமான உண்டிவகைகளையே உண்டல் வேண்டும். வைத்தியங் கொஞ்சமேனுந்தெரியாதவர்கள் இல்லை. பகுத்தறிவெய்திய வளவில் இதையெல்லாம் ஒவ்வொருவரும் தம் தம் அனுபவத்தால் அறியலாம்.

மருந்தென வேண்டவாம் யாக்கைக் கருந்திய
தற்றது போற்றி யுணின்.

இங்ஙனம் தேகவியல்புமுதலிய வற்றோடு மாறுகொள்ளாத உணவை மிதமாக உண்பதே நீடியவாயுள் பெறுதற்கான உபாயமாம்.

அற்றா லளவறிந் துண்க அஃதுடம்பு
பெற்றா னெடிதுய்க்கு மாறு.
மாறு பாடில்லா வுண்டி மறுத்துண்ணின்
ஊறுபா டில்லை யுயிர்க்கு.

பசித்தால் உண்க; தாகமெடுத்தால் தண்ணீர்குடிக்க என்பவர் ஆங்கிலேயர். "ஞாலந்தான் வந்திடினும் பசித்தொழிய வுண்ணோம்" என்றார் தேரையரும்.

அற்ற தறிந்து கடைப்பிடித்து மாறல்ல
துய்க்க துவரப் பசித்து.

ஜீரணசக்தி மிக்கவர்கள் நாள்தோறும் மும்முறை நான்முறை உண்பதோடு இடையில் சிற்றுண்டிகொள்ளுவர். ஜீரணசக்தியோடு தேகவுழைப் புள்ளவர்கள் இடைவேளைகளில் சிற்றுண்டிகொள்ளினும் கொள்ளாவிடினும் இரண்டுபோதுண்பதே தேகாரோக்கியத்துக்கு அனுகூலமாகும். தேவையரும் "உண்பதிருபொழுதொழிய மூன்றபொழுதுண்ணேம்" என்றனர்.

ஒருபோது யோகியே ஒண்டொளிர்க்கை மாதே
இருபோது போகியே யென்ப—திரிபோது
ரோகியே நான்குபோ தீண்பான் உடல்விட்டுப்
போகியே யென்று புகல்.

உழைந்தல்செய்தவுடனே வுண்ணுதலும்உண்டவுடனே வுழைத்தலும் ஆகா. உண்டபின் தாம்பூலந்தரித்தலால் உற்சாகம் ஜீரணவிருத்தி முதலான பலநன்மைகள் உண்டாவதாக நமது மருத்துவநூல்கள் கூறுகின்றன. தாம்பூலந்தரிப்பது நமது தேசாசாரம். "உண்ணுஞ்சோறு பருகுநீர் தின்னும்வெற்றிலையு மெல்லாங்கண்ணன்**" எனவருவதுங்காண்க. உண்டபின்னல்லது இடைவேளைகளில் தாம்பூலங்கொள்வது கூடாது. "உண்பாக்கொழிய வீண்பாக்காகாது" என்றது மூதுரை.

தாகம் என்பது தமிழில் நீர்வேட்கை என்னப்படும். இது எல்லார்க்கும் இயல்பு. நீர்வேட்கையை வேறென்றால் தீர்ப்பது ஆகாது. சிலர் நீர்வேட்கையை அடக்க மதுபானஞ்செய்கின்ற துராசாரத்தை மேற்கொள்ளுகின்றனர். "எஞ்ஞான்றும் நஞ்சுண்பார் கள்ளுண்பவர்." "தண்ணீரிவிறந்தவரிலும் சாராயத்திலிறந்தவர் அதிகம்."

கையறி யாமை யுடைத்தே பொருள்கொடுத்து
மெய்யறி யாமை கொளல்.

மதுபானம் சீதளமித மண்டலதேசாசாரம். அம்மண்டலத்தவரும் அதனை அமிதமாகக்கொள்வதை அநாசாரமாகக் கொள்கின்றனர். அவர்களுள்ளும் பலர் இப்பொழுது அதனைக் கடிகின்றவராகின்றனர். மற்ற துராசாரங்களோடு சேர்த்து "இருமணப்பெண்டிருங் கள்ளுங் கவறுந், திருநீக்கப்பட்டார் தொடர்பு" எனக் கூறியிருப்பது காண்க. குடி சூது விபசாரம் குடியைக் கெடுக்கும்.

**உறக்கம்:**—புலி சிங்கம் முதலிய சில வனவிலங்குகள்மாத்திரமே புதர் குகை முதலிய விடங்களில் பகலில் ஒளித்துறைந்து உறங்கியிருந்து இரவில் இரைதேடப் புறப்படுகின்றன. பகற்குருடான கூகைமுதலிய சில பக்ஷிகளும் பாமும் பொந்துகளில் தங்கியிருந்து இரைகொள்ள இரவில் வெளிப்படுகின்றன. மாலையானல் பக்ஷிகளெல்லாங் கூடுபுக்கடைகின்றன;

வனவிலங்குகள் ஓரிடமடைந்து உறங்குகின்றன. சில விருக்ஷங்களும் இலையோடு இலை குவிந்து உறங்குவனபோல்கின்றன. விருக்ஷங்களில் ஓரினமரம் தூங்குமூஞ்சி மரமென்றே பெயர்பெறுகின்றது. கள்வர் காவலாளர் முதலிய சிற்சிலர் தவிர மன்பதைகளும் இரவில் உண்டபின் உறங்கிவிடுகின்றனர். குக்ஷிபாதையின் பொருட்டுப் பகலில் உழைப்பதும் அவ்வுழைப்பின் அயர்ச்சியால் இரவில் உறங்குவதும் பொதுவில் ஜீவவர்க்கங்களின் பிரகுர்தியாக இராகின்றது. யாதொரு அவசரநிமித்தமாக ஓரிராமுழுவதும் விழித்திருந்தவர்கள் மறுநாளில் தாங்கள்வழக்கமாகச் செய்யும் தொழிலைச் செய்ய இயலாமல் இடர்ப்படுவது இயல்பு. சிலதேசங்களிற்சில குற்றங்களுக்குக் கண்ணிரப்பையைச் சேதித்துவிடுகிற தண்டம் விதிக்கப்படுகின்றது. அவ்விததண்டம்பெற்றவர் உறக்கம்பிடியாமல் சிலநாளில்மரணமடைகின்றனர். இடைஇடையில் ஆறவிடாமல் என்னேரமும் இயக்கப்படும் இயந்திரங்கள் விரைவில் பழுதடைந்து பயனற்றனவாகின்றன. ஆகவே இளைப்பாறி அயர்ந்து நித்திரைசெய்வது ஜீவவர்க்கஙனைத்திற்கும் அவசியம் என்பது தெரியப்படும். பகலில் தொழில்செய்துழைக்கும்போது சிலதாதுக்கள் தேய்தலாய்க் கழிகடையாகின்றன. அவை, இரவில் நாம் அயர்ந்து நித்திரைசெய்கையில், இரத்தவோட்டத்தினுல் மறுபடியும் சரிவரநிரம்பி மறுநாள் தேகஉழைப்பிற்கு எற்றனவாகின்றன. உற்று நோக்கின், உறக்கமே உழைத்து பழுதுற்றஉடலைச் சீர்செய்யுஞ் சிற்பி: அன்றுடம்மரித்தலான தாதுக்களை உயிர்ப்பிக்கும் சஞ்சீவி: உழைப்பால் வந்த அயர்ச்சியைப்போக்கும் உத்தமபரிகாரி: வாடிய மேனியை மாற்றேற்றிமினுக்கிக்காட்டும் பரிசனவேதி: இரவைப் பகலாக்கும் மாணுக்கர்க்குப் பகலை இரவாக்கிக்கொடுக்கும் மாந்திரிகன்.

உறக்கத்துக்குரியகாலம் இரவே. "உறங்குவ திராவொழியப் பகலுறக்கஞ்செய்யோம்" என்ருர் தேரையர். பகலிலுறங்குவது நோய்க்கிடம். "பகல்வளரார் நோயின்மைவேண்டுபவர்." இரவிலும் அர்த்த ஜாமம் உறக்கத்துக்குமிகவும் இன்றியமையாதது. "யேமம்புகினுஞ் சாமத்துறங்கு." நன்னிரவுக்குப்பின்னுல் இரண்டு நாழிகைஉறங்குவதினும் நள்ளிரவுக்கு முன்னுல் ஒருநாழிகை உறங்குவது உத்தமம் என்பது ஆங்கிலேயருக்கும் அனுபவம்.

அதிகமாக உறங்குவதும், சோம்பலுக்கும் அதனுலுளவாகின்ற குற்றங்களுக்கும் நோய்களுக்கும் காரணமாகும். அதனுலன்றே " அனந்தலாடேல்" என்ருர் ஒளவையார். " கூற்றத்தின் வாய்வீழ்ந்த கும்பகருணனுந் தோற்றுமுனக்கே பெருந்துயில்தான் தந்தானே, ஆற்றவனத்தலுடையாய்" என்றவாறு வேண்டியஅளவுக்கு அதிகமாக உறங்குகின்றவர்களை நம்மவர்கள் மூதேவிக்கு உறைவிடமாக உரைப்பர். "நித்திரைசத்துரு (நேரிழைசத்துரு)

வெனவழங்குவதும் அக்கருத்துப்பற்றியே யன்றோ? உறங்குமளவானது அவரவருடைய தேகநிலைமைக் கேற்றதேயாயினும் சராசரியில் எழுமணிநேரம் போதுமானதென்று சுகாதார நிபுணர்கள் உணர்த்துகின்றனர்.

பொழுதோடு படுத்துறங்கிப் பொழுதோடு எழுவதால் ஆரோக்கியமும் ஐசுவரியமும் அளவின்றி தெளிவுமுண்டாகும் என்றது ஒரு ஆங்கிலேயப் பழமொழி. நமது மருத்துவநூலும் அதிகாலையில் விழித்தெழுவதைக் குறித்து,

புத்தி யதற்கும் பொருந்து தெளிவளிக்கும்
சுத்தி நரமபினற் றூய்மையுறும்—பித்தொழியும்
தாலவழி வாதபித்தந் தத்தலிலை மன்னுமதி
காலைவிழிப் பின்குணத்தைக் காண்.

என உரைக்கின்றது. "வைகறைத் துயிலெழு" என்பது நாம் இளமையிற் கற்ற பழம்பாடம்.

வைகறை யாமந் துயிலெழுந்து தான்செய்யு
நல்லறமும் மொண்பொருளுஞ் சிந்தித்துவாய்வதிற்
றந்தையுந் தாயுந் தொழுதெழுக வென்பதே
முந்தையோர் கண்ட முறை.

என்றார் ஆசாரக்கோவையில். ஒன்பது அல்லது பத்துமணிக்குப் படுத்துக்கொண்டால் நான்கு அல்லது ஐந்து மணிக்கு எழுதலாகும். அர்த்தராத்திரியில் விழித்துக்கொண்டு நெடுநேரந் தூக்கம் பிடியாமலிப்பவர்கள் அதிகாலையில் விழித்தெழும் வழக்கத்தை அனுஷ்ட்டிப்பாராயின், அங்ஙனம் நித்திரையின் இடையில் எழாமல் நல்ல நித்திரை செய்பவராவர். லௌகிக காரியங்களுக்கு உண்டாகிற இடையூறுகளாலும் வேறு மனக்கவலைகளாலும் உறக்கம்பிடியாதவர்கள் உறக்கத்தினிமித்தம் சாராய முதலிய லாகிரி வஸ்துக்களையும் பூரணாதி முதலிய லேகியங்களையும் உண்ணலாகாது. இயற்கையாய் உண்டாகிற நித்திரையேநன்மையைத் தரும். படுக்கும்போது அன்றுபகலம் செய்தகுற்ற நற்றங்களை ஆராய்ந்து பார்த்து அன்றன்றளவில் அடைதலான நன்மையின் பொருட்டுக் கடவுளை நமஸ்கரித்து நிச்சிந்தையாகப் படுத்துறங்குவதே நன்மை.

கிடக்குங்காற் கைகூப்பித் தெய்வந் தொழுது
வடக்கொடு கோணந் தலைசெய்யார் மீக்கோ
ளுடற் கொடுத்துச் சேர்தல் வழி.

வயிறு நிறைய உண்ட பின்பு உடனே படுத்துறங்குதலால் அமைதியின்மை முதலிய துர்க்குணங்கள் உண்டாகும். ஒன்றும் உண்ணாமல் பட்டினியாய் உறங்கப் புகுவதும் ஆகாது. கனவு காண்டல் முதலியன இன்றி மெய்

மறந்து உறங்குவதே நல்ல உறக்கமாகும். பலபேர் படுக்கும் அறைகளிலும் மிகவுந் தாழ்வான அறைகளிலும் காற்றுத் தாராளமாய்ப் பரவுதல் இல்லாத அறைகளிலும் ஒதமான தரையிலும் படுத்துறங்குதலாகாது. நீல மட்டத்தில் அசுத்தவாயு அளாவி யிருத்தலினாலே கட்டிலின்மேற் படுத்துறங்குவதே உத்தமம். பலகணி முதலியவற்றின் மூலமாய்க் காற்று நேராக உடலின்மீது வீசும் இடத்தில் படுத்தலாகாது. படுக்கையறையில் மல்லிகை முதலிய புஷ்பவகைகளும் மாரிகாலத்தில் கும்பிசட்டி முதலியவைகளும் இருத்தலாகாது.

திருமணம் – செல்வகேசவராய முதலியார் M. A.

---

# சரஸ்வதி.

---

## 1-வது அத்தியாயம்.

### உத்தியானவனம்.

சூரியனைத்தம் பெரிய ராஜ்யத்தில் அஸ்தமிக்காது நடக்க ஆஞ்ஞாபிக்கும் ஆற்றலுடையவரான சக்கிரேஸ்வரி விக்டோரியா சக்கிரவர்த்தினிப் பெருமாட்டியாரின் ராஜஸ்தான நகரமாகியும், பூமிதேவிக்கு ஓர் திலகமென விளங்கியும், அஷ்ட லக்ஷ்மிகளும் சேவைசெய்து கிடக்கும் பெரும்பாக்கியம் பெற்றதாயும், தேவர்கோனும் பொறாமையடையத்தக்க போக போக்கியங்களுடையதாயும் பிரகாசிக்கும் சீமை என்று வழங்கப்பட்டுவரும் லண்டன் நகரின் தென்பாரிசத்தில் கற்பகத்தையொத்த விருக்ஷங்களாலும், பாரிசாதத்தை நிகர்த்த திவ்யமலர்களைப்புட்பிக்கும் வினோத காட்சியுள்ள செடிகளாலும், பசுமை பூத்த பல்வகை புல்பூண்டுகளாலும், கீழ்த்திசை தேசங்களறியாத சுந்தர வடிவெய்திய பலசாதிப் பறவைகளாலும், கண்டவர் மனதைக்கவரும் அழகிய காட்சி யெய்திய அற்புதாலங்கிருத உத்தியானவனத்தின் முக்கிய சாலையினோர்புறம், காமனோ தேவனோ யாவனோ வென்று நின்றவர் மலைத்து நோக்கிய சுந்தரதேகத்தைத்தாங்கிய வாலைப் பருவமடைந்துற்ற சிறுவனொருவன் தன்னந்தனியனாய்த் தன்னையே காணாதுலாவிக் கொண்டிருந்தான். இருந்தாற்போலிருந்து இளைஞன் தன்னை மறந்ததன்மை யொழிந்து தன்னை யுணர்ந்து, கைக்கடிகாரத்தை பாக்கட்டினின்று மெடுத்துப்பார்த்து அடடா! என்ன! 6-மணி ஆய்விட்டதே! காலம் என்னை வஞ்சித்துச் சென்றது. நான் இன்று பார்ப்பதாகச் சொல்லியிருந்த நண்பர்களை இனிச் சந்திப்பதரு

மை. பொய்யாவிரதம் பூண்ட என் நன் மொழியும் புன் மொழியாய் முடிந்தது. ஞானம் என்னைக்குறித்து என்ன நினைப்பான். போசும், கோசும் டட்டும் வுட்டும் கைகொட்டிச் சிறியா தொழிவரோ. என் தேகம் இங்கும், என் மனம் இந்தியாவிலும் இருந்தபோற் காண்கிற இரண்டுமணி நேரமாய்—இம்மாதம் என் தாயிடமிருந்து கடிதம் ஒன்றும் வராமைக்குக் காரணம் யாதோவென்று தனக்குத்தானே பேசிக்கொண்டு கடிகாரத்தை யிருப்பிடம் சேர்த்து முகத்தைத் தூக்கிக் கிழக்குமுகமாய்ப் பார்த்தான்.

அப்போது அந்தத்திசையில் கொஞ்சம் தூரத்தில் ராஜஸ்திரீ போன்ற ஓர் கன்னிகை எதிர்நோக்கி காலடிப்பாதையில் வருவதைப்பார்த்து பின் வருமாறு சிந்திக்கலாயினன்.

"இவளென்ன தேவஸ்திரீயோ! அரம்பை, ஊர்வசி, மேனகை, திலோர்த்தமை என்னும் சுவர்க்கலோக வாசிகளில் ஒருவளோ? அலது கலைமாதோ! இவளழகைச் சித்திரிக்கப் பிரமன் என்ன தவஞ் செய்தானோ? சந்திரனைப்பழித்தமுகமும் சுவர்னத்தைப்பழித்த மேனியும், அன்னத்தைப்பழித்த நடையும் இம்மின்னுளடைந்தது என் மனதைக்கொள்ளை கொள்ளவோ? என் ஜன்மாந்தரதவம் பலித்ததோ? நேத்திரோற்சவம் அடைந்தநான் சுரோத்திரானந்தமடையப்பெறுவேனோ" வென்றெண்ணி யெண்ணி மரம்போல் மரமீதுநம்மன்மத மேனியான் சாய்ந்தபோது, ஒருபுறம் புல் மேய்ந்திருந்த ரிஷபமொன்று, எமனுடைய வாகனம் போன்ற ஆகாரமுடையது, நெருங்கி வரும் ரதி நாணும் அழகியைக்கண்டு, அவளுடுத்திய ஆடையின்ரோஜா நிறத்தைப்பொறுது வெருண்டு மானைக்கண்ட புலிபோல் அவளைப் பொங்கிப்பாயக்கிளம்பியது.

இதைக்கண்ணுற்ற சிறுவன் தன் தேகம் நிலைகொள்ளாதவனாய்ச் சிறிமனங் கலங்காது தன் தேகத்தையேனும் பலியிடுவது சித்தமென்று முடிவு செய்தவனாய், ஒரு க்ஷணத்திற்குள் ஆண் சிங்கமென இடையிற் பாய்ந்து மறலியை யொத்த கொடிய மிருகத்தின் கொம்புகளுக்கிலக்காய் நின்றான். தற்செயலாய் அவன் கையிலிருந்த குடையொன்று விரியவே, மூர்க்க மிருகம் சொர்ப்பனம் கண்டாற்போல் ஒதுங்கிப் பின்னோடியது. குடையில்லா திருந்திருந்தால் அனேகமாய் எருது இளம்பிரபுவை எமலோகமேசேர்ப்பித்திருக்கும். இவை யாவையும் நடுங்கிய தேகியாய்படபடத்த நெஞ்சுடன் கண்டவச் சுந்தரமாது பீதி யடைந்து மூர்ச்சித்து விழுந்தாள். இளைஞன் தான் விழுந்த இடத்தைவிட்டு உடனே பெயர்ந்து, எருதைப் பின் தொடர்வதனாவசியமெனக்கண்டு பின்சென்று அத்தியந்த விசுவாசத்துடன் பெண்மானைக்கிட்டி நெருங்கி அவளிருந்த நிலையைக்கண்டச் சமடைந்து அவளழகியகையைத்தொட்டு நாடி மெதுவாய்ப் பேசுவதை யறிந்து சந்துஷ்டியடைந்து, நவரத்தினங்கள் நிறைந்த பொற்றட்டை எந்திச் செல்லும் லோபியினுடையபக்தி

சிரத்தையுடன் மதிப்பிலாப் பெண்மணியை கைகள் நோற்ற நோன்பின் பய னாக மெல்லன ஏந்திச்சென்று தாயை நோக்கியோடும் கன்றேபோல் தெம்ஸ் நதியைக்கலக்கவோடும் ஓர் சிறிய அருவியின் தீரத்தில் கிடைக்கப்பெற்றால் வாழ் நாண்முழுமையும் பூரண அன்புடன் சுமக்கத்தக்க தன்கைப்பளுவை சர்வ சாக்கிரதையாயிறக்கி, கைக்குட்டையில் அருவிநீரைமுகந்து அவள் திரு முகத்தில் புரோட்சித்து, சயித்தியோபசாரங்கள் செய்தபோது, மேகங்க ளான் மறைக்கப்பட்டுக் கிடந்த பூரணச்சந்திரன் வெளிப்பட்டதுபோல் அவள் பிரஞ்ஞையடைந்து கண்விழித்து, துள்ளியெழுந்துட்கார்ந்து தான ணிந்த வாடை சீர் குலையாமலிருந்ததைக்கண்டு மனமடி வொழிந்து சிறு வன் உயர்குல ஒழுக்க விசுவாசத்துடன் தன் விஷயமாய் நடந்துகொண்ட விஷயத்தை மனத்தான் வியந்து மருண்ட பார்வையால் அன்பனை நாண் விசு வாசத்துடன் உற்று நோக்கினள். இருவர் நேத்திரங்களும் பரஸ்பர சம்பந் தம் கலந்தன. அவர்கள் சுத்தாந்தக்கரணங்களில் ஜனித்த அன்பு இருவர் கண்ணொளியினும் பிரதி பலித்தது. தேக தத்துவக் ஞான மொழிந்து ஏகா ன்மபாவமாய்ச் சிறிது நேரம் சுகித்தார்கள். உடனே வொடுங்கிய மனம் விரிந்து வெளிப்பட,

நம் பொன்மணி வாகிந்திரியமடைந்து "ஐய! உமது பிராணனையே பலியாய்த்தந்து எனக்குப்பிராணப் பிரதிஷ்டை செய்விக்கத்துணிந்த உம துத்தமோபகாரத்திற்கு யான் என் ஆயுள் முழுமையும் நன்றியறிந்தவளாயி ருக்கக் கடவேன். எனக்குப் பத்து பிராணனிருந்து, அவையாவையும் சம யம் வாய்த்தபோது தனித்தனி உமதுயிரை ரட்சிக்க செலவழித்தாலும் நீர் செய்த நன்றிக்கு அவை பிரதியாகமாட்டா. என் மனோபிப்பிராயத்தைப் பூர ணமாய் மனுஷபாஷையால் வெளிப்படுத்த அசக்தையாயிருக்கின்றேன். பரமேஸ்வரன் உமக்குச்சகல வாழ்வையும் அனுக்கிரகிப்பாராக" வென்று குயிலைப்பழித்த இன்னிசையமைந்த இளங்குரலோடு நடுக்கலுற்ற மொழி களால் மொழிந்து தலை குனிந்தாள்.

வேளாளர் குலஞ்செய்த தவப்பயனாய் வந்த சிறுவன் மனம் கரைந்து "அம்மணி! நீர் என்னை இவ்வளவு சிலாகித்துப் பேச நான் செய்த பாக்கிய மே பாக்கியம். ஆயினும் என் கடமையை ஒருவாறு செலுத்தினேனே யொழிய மற்றொன்றும் செய்திலேன். புருஷலட்சணமடைந்த புருஷர் நடந்துகொள்ளவேண்டிய முறைமையை ஒருவாறு அனுசரித்தேன். இதைக் குறித்து நீர் விசேஷமாகச் சொல்லவேண்டாம். உம்மிட அனுமதியின்பேரில் உமக்கு வழித்துணையாகி உம்மை யிருப்பிடம் சேர்ப்பித்து என் ஜா கைக்கேகுவே" னென்று கூறி உத்தமஸ்திரீயாவாளை கைலாகுகொடுத்து எழுப்பி,

நகரையடுத்து அழைத்துச்செல்லு மார்க்கத்தில் "மாது சிரோமணி! உம்மை முதற் பார்த்தபோதே நீர் ஐரோப்பியஸ்திரீ அல்லவென்று

தெளிந்தேன். பரதகண்ட நிவாசியாகத்தானிருக்க வேண்டுமென்று யூகித்தேன். நீர் எந்ததேசம் என்ன அந்தஸ்துடையர்? என்பதை தயைசெய்து தெரிவிக்கவேண்டும்'' என்று தமிழ் நாட்டான் இரந்துகேட்க, வடநாட்டுப் பெண்ணரசி'' "ஐய, என் குற்றத்தை க்ஷமிக்க வேண்டுகிறேன். பிராண பிட்சை கொடுத்த உமக்கு மறைக்கத்தக்க தொன்றில்லை. யானடைந்த மனக்கலக்கத்தால் என் வரலாற்றை உமக்குத் தெரிவிக்கக் காலம் தாழ்த்தேன். யான் பங்காளதேசத்துப் பிரபு வொருவர் குமாரத்தி, என்னை ஆங்கிலேய நண்பர்கள் மிஸ் முடலியார் என்றழைப்பார்கள். என் சொந்த பெயர் சரஸ்வதி. மூன்று தலைமுறையாக என் தந்தையின் பாட்டன் காலம் தொடங்கி நாங்கள் பங்காளத்தில் வாழ்ந்து வருகிறோம். யான் இவ்விடம் ஐரோப்பிய வயித்திய சாஸ்திரங்களில் பாண்டித்திய மடைவானனுப்பட்டுள்ளேன். நீர் இப்போது எனக்குச் சோதரஸ்தானத்தில் நிற்பதால் என்னை சரஸ்வதி யென்றே இனி அழைக்கும்படி பிரார்த்திக்கின்றேன்'' என்று மறுமொழி கூறி "நான் பகவத் பிரார்த்தனை செய்யும்போதெல்லாம் உம்மைக் குறித்து அவரிடம் விண்ணப்பிக்கும் பொருட்டு உமது திவ்ய நாமத்தைத் தெரிவிப்பீ'' ரென்று அன்புடன் உசாவினள்.

அன்பன் தேகபுளகாங்கித மடைந்து "சரஸ்வதி! புகழும் சரஸ்வதி! என் வந்தனம் அங்கீகரிக்கவேண்டும். யான் தமிழ் நாட்டுப் பிரபுவும் இரங்கோன் பட்டணத்து பாரியவர்த்தகருமாகும்சுந்தரேச முதலியார் என்பாரொருவரின் ஏக புத்திரன். எனக்கு பாஸ்கரஸ்வாமி என்று நாமகரணஞ் செய்வித்தார்கள். யான் சீமைக்கு நியாயவாதசாஸ்திரப் பயிற்சி செய்து பாரிஸ்டர் பட்டம் பெற்று சுதேசம் திரும்பிப்போகவந்துள்ளே'' னென்று முடிக்கும்போது,

சரஸ்வதி தங்கியிருந்த மாளிகையினின்றும் புறம்போந்த ஐரோப்பிய சீமாட்டி ஒருவள் அவர்களைக்கண்டாச்சரியமடைந்து நெருங்கி சரஸ்வதியைத்தழுவி, "குழந்தாய், எங்கே சென்றிருந்தாய்? என்ன விசேஷம் நிகழ்ந்தது? இவர்யார் இந்த இளம்பிரபு?' என்று பிரஸ்னையின் மேல் பிரஸ்னை செய்து, பிற்பட்டு நடந்த சங்கதிகளெல்லாம் கேள்வியுற்று, உள்நுழைந்து தன் காதலரிடம் அவர்களை கூட்டிச்சென்றுமுதலியார் உறவு சரஸ்வதிக்கு நேரிடுவதற்கு காரணமாய் நின்ற மிருகத்தின் வரலாற்றை சவிஸ்தாரமாய் எடுத்தோதி முதலியாரை ஸ்துதிக்க ஆரம்பித்தவள் காலாந்தரத்தும் அவர் புகழைப்பாடி முடியாள் போற்றேனின்றது.

ஜான்சன்துரைவர்கள் தன் காதற் கிழத்தியைக் கையமர்த்தி தென் இந்திய பிரபுவைப்பார்த்து "ஐயா உம்முடைய நட்பு தெய்வீகமாய் எமக்குக் கிடைக்கப்பெற்ற விஷயம் நிரம்பவும் நமக்கு சந்தோஷத்தைக் கொடுத்தது. சத்தியமும், தயையும், ஞானமும் குடிகொண்ட உமது திருமுக தரிசனமாத்

திரத்தில் எங்கள் சரஸ்வதி கிருதார்த்தையாயின ளென்பதிற் றடையில்லே. நீர் இன்று இவிடம் போசனமருந்தி சிரம பரிகாரமடைந்து நாளே உம்மிருப்பிடம் செல்லும்படிபிரார்த்திக்கின்றேன். மிஸ்டர் முதலியார் அம்மாளுக்கு நேர்ந்த கொடிய விபத்தை விலக்கிய விஷயம் வெகுசாய் வியக்கத்தக்கதே. எம்முடைய வந்தனங்களும் அது விஷயமாய் உமக்குச் செலுத்துகின்றோம். இயல்பாகவே நாங்கள் சொந்த பெண்போல் பாதுகாத்துவரும் குழந்தையை நீர் மறுபடியும் காண இச்சிப்பீரென்பது சித்தம். ஆயின் எனக்கு உங்களுடைய சினேக பரிபாலனஞ் செய்விக்க அதிகாரமில்லே. மிஸ்டர் முதலியார் அவர்கட்கு கடிதமெழுதி யாவும் தெரிவித்து அவர் அனுமதியின் பேரில் நீர் மறுபடியும் எங்களே வந்துகாண உத்திரவளிக்கப்படும். அதுகாறும் நீர் ஏகதேசமாய் இந்தஅம்மாளே இம்மா நகரிலெங்குகண்டாலும், அறிமுகமில்லாதபெரிய குடும்பத்துக் கன்னிகையைக் கண்டா லெவ்விதம் ஒழுக வேண்டியதுமது கடைமையாகுமோ, அவ்விதமே இவள்விஷயத்திலும் நடந்துகொள்வீரென்று பூரணமாய் நம்புகிறேன்'' என்று சொல்லி முடித்தார்.

பொழுதும் முடிந்தது. அம்மாளிகையின் உன்னதஸ்தானத்தில் வைக்கப்பட்டிருந்த கடிகாரம் ஒன்று ௭-மணி அடித்து இடையிடையில்செய்த வாத்தியமும் முடிந்தது.

பாஸ்கரஸ்வாமி முதலியார் சினேகரொருவர் வீட்டில் முற்பட்டே சாப்பாட்டுக் கொப்புக்கொண்டிருந்த படியால் துரைக்கு உபசாரவந்தனம் சொல்லி, மூவரிடம் உத்திரவு பெற்றுக்கொண்டு, ஆத்ம தத்துவத்தை சரஸ்வதி சந்நதியில் விட்டுவிட்டு, ஆங்கிலேயர் ஆசார அனுஷ்டானம் தவருதவனுய் வாடகை வண்டி ஒன்றிலேறி வெஸ்ட் என்டு என்னும் நகரத்தின் மேற்கு பாகத்தை போசன டயத்திற்குச் சரியாய் அடைந்தார்.

---

## இரண்டாவது அதிகாரம்.

### இரங்கோன் சின்னகாந்தம்.

நம் பெரியோர்களால் ஆக்கப்பட்ட புராணேதிகாசங்களில் வாயுவேக மனோவேகமாய்ப்பலர் முன் யுகங்களில் தேச சஞ்சாரம் செய்து வந்ததாய்க் கேள்விப்படுகிறோம். தற்காலத்தில் புகைவண்டிக் கோர்வைகளிலும் புகைக் கப்பல்களிலும் நாம் பிரயாணம் செய்து வாயு கதியை ஒருவாறு திநர்சனமாயறிந்துள்ளோம். மனோ வேகமாய் தூலதேகத்துடன் நாம் தூரதேசங்களேயடைய முயல்வது அசாத்தியம். குளிகை ஒன்றை யனுக்கிரகிக்கச் சித்தர்களேயும் காண்கிலோம். அனேகமாய் நமக்கு உபதேசிக்க எழுந்தருளும் குரு மூர்த்தங்கள் சாப்பாட்டுச் சாமிகளாகவே யொழிகிறார்கள். ஆகவே ஸ்வதந்திர முயற்சியால் நாம் மனோவாகனுரூடராகி நொடிப்பொழுதில் இரங்கோன் பட்டணத்தை யடைவோமாக.

லண்டனைக் கண்டுவந்த நங்கண்கட்கு பர்மாவின் பிரதான நகர் சூரியன் முன் மின்மினியடையும் ஒளியையே யடைந்தொழியும். சென்னையின் அழகு நாகரீகங்களில் இரங்கோன் நூற்றிலொருபங் கடைந்திராது. ஐராவதி நதியில் புகைக்கப்பல்கள் ஓடுவதொன்றே அப்பட்டணத்தின் விசேஷ காட்சியாகும். வானத்தை யளாவிக்கிடக்கும் அந்நகரின் பயாக்களும் சென்னையில் மதிமுடிக் கடவுள் அருட்கோலங் கொண்டெழுந்தருளிய தேவாலயங்கட்கு இணையாகா. கண்சென்ற விடமெங்கும் மரமயமாய்க் கிடக்கும் அவ்வூர்க் கட்டிடங்கள் சென்னையின் சிறந்ததற் கட்டிடங்களால் அதி நாண மடைந்தொழியும். ஆயினும் இந்த பிரதேசத்தைப் புறங்காணச் செய்யும் வியாபார விர்த்திகளை அமோகமாய் அந்நகர் அடைந்துள்ளது என்றோர் வதந்தியுண்டு. பிரத்தியட்சத்தில் பர்மர், சினர், ஜெபானியர், துருக்கர், ஐரோப்பியர், இந்தியர், ஆப்ரிகர் முதலிய பலஜாதி மனுஷியர் நெருங்கி நடக்கும் காட்சியாலும், அளவு கடந்த பர்மஸ்திரீகள் கடைவிற்கும் ஆசாரத்தாலும், பர்மஸ்திரீகளை தரித்திரத்தினல் பீடிக்கப்பட்டு வருந்தி குட்சிபாதையை நிவர்த்திப்பானடைந்த பல இந்துக்கள் மணந்து பற்பல கைரவஸ்தானங்களை யடைந்து செருக்கும் செருக்கினலும், ஆண்டு இந்துக்களால் கட்டப்பட்டுள்ள சில ஆலயங்களில் ஜாதி கெட்ட பிராமணர்களுக்கும்மிலேச்ச ஸ்திரீகளுக்கும் நேர்ந்த காந்தர்வவதுவையால் உற்பத்தியான செல்வப் பிராணச் சிறுவர் பெருமான் திருமேனி தீண்டி பூசனை புரிந்து வரும் பேற்றினலும், இத்தகைய பல சம்பவங்களானும் அந்த க்ஷேத்திரம் சிறந்த தென்பதற்கு ஐயமில்லை என்றுசிலர் கூறுவதை நாம் கேள்விப்பட்டுள்ளோம். நிற்க, அப்பட்டணத்தின் எல்லையையடுத்துச்சிறிது தூரத்தில் காந்தம் என்று அழைக்கப்படும் ஓர் கிராமமுண்டு. அதையடுத்த ஓர் அழகிய தோட்டத்தில் தேவாலய திருக்குளத்தின் மத்தியில் காணப்படும் சிங்கார மண்டபம்போல் சுரேந்திர விலாசம் என்று பேரிடப்பட்ட திவ்ய கட்டிடமொன்று ஜோடிக்கப்பட்டிருந்தது. அதைச்சுற்றிப் பச்சென்று படர்ந்துகிடந்த பூங்கொடிகள் கண்ணனைப் பிரியாவிடையாய்ச்சூழ்ந்து விளங்கிய கோபிகாஸ்திரீகளைப்போற் காணப்பட்டன. அம்மாளிகையினுட்புறத்து ஐரோப்பிய நாகரீகமடைந்து விளங்கிய சித்திரக் கூடமொன்றில் நாற்பதை நெருங்கிய கம்பீர தோற்றமுடைய புருஷரொருவரும், நடராசனையே நோக்கிய கண்களைப்பெற்ற பச்சைப் பசுங்கிளிபோல் பதியிடத்தே கண்ணோக்கம் வைத்து நின்ற அவர் நாயகியும், அடுத்த இருபுட்பங்கள் பெருக்கிய அருந்தேனை மாறிமாறி யருந்திச் சப்திக்கும் தேனீபோல் தாயைத் தழுவியும் தந்தையைக் கொஞ்சியும் தங்கிய சிறுமி ஒருவளும் அடுத்தடுத் திட்டிருந்த ஆசனங்களிலிருந்தார்கள். பூரண சந்திரனுக்கும் களங்கம் தோன்றுவது போன்று ஒருவரிலொருவர் சந்தோஷித்துச் சுகப்பட்ட அன்னோர் சந்துஷ்டியும் சில குறைவையடைந்து கிடந்தது.

தலைவன் தலைவியைப்பார்த்துப் "பெண்ணே! என்ன துக்கம்நமக்கு நேரிட்டாலும் குழந்தை பாஸ்கரனை முற்றும் மறந்திருப்பது அழகலவே" என்றார்.

லீலாவதி " அம்மா ! அண்ணனுக்கு நானாவது பதிலெழுதட்டுமா ? " வென்றுதாயைப்பரிந்து கேட்டாள். பெருமாட்டி பாஸ்கரன் ஞாபகம் ஊட்டப்படவே மனம் பொறாது தன்னையேநொந்து தேம்பித்தேம்பிச் சிறிது நேரம் பொருமி, மனம்தேறி "ஆம், என் குற்றம் பெரியது, நாளைய மெயிலில் சிறுவனுக்குச்சவிஸ்தாரமாய் யாவையும் தெரிவித்து ஒரு கடிதம் எழுதியனுப்புகிறேன்" என்றுமுடித்து"அண்ணா! போஜனம் பண்ணியாயிற்றா? பாரம்மா லீலா"வென்று பெண்ணைப்பார்த்துக்கேட்கும் சந்தர்ப்பத்தில்,

சத்திய கீர்த்திமுதலியார் தாம்பூலத் தட்டேந்தி ஊழியன் ஒருவன் பின்தொடர "இவர்கள் இருந்த உள்ளையடைந்தார். அடைந்தவர் சோதரியைப் பார்த்து எனம்மாஇப்படி விசனத்திலாழ்ந்திருக்கின்றனை? வினை வழிவரும் துக்கத்தை யார்தடுக்க வல்லார். அண்ணா கொடூரமான அகால மரணமடைந்தது நமக்குப் பெருந்துயரமேயாகும். தம்பி கல்யாணசுந்தரம் அண்ணன் உயிரைப்போக்கினான் என்னும் கொடிய வதந்தி எட்டுணையும் நம்பத்தக்கதல்ல. தம்பியைக்குற்றவாளி என்றெண்ணுவதைவிட என்னையே கொலை புரிந்தவன் என்றெண்ணலாமே. சுந்தரம் ஒருபோதும் இக்கொடிய வினை புரியத்துணியான். அவன் குற்றம் செய்து தலை மறைந்தான் என்று கொண்டு நிந்திக்கும் நம் பந்து மித்திரர்கள் மனுஷ சுபாவத்தை ஒரு நாளும் அறிந்தவர்கள் அல்லர். ஏதோ எல்லாம் மாயவகையாய்த்தோன்றுகின்றன. பகவத்சங்கல்பத்தால் உண்மை கூடிய சீக்கிரம் வெளிப்படும் என்று நினைப்பதற்கு பல ஏதுக்களிருக்கின்றன. நீ அஞ்சற்க" என்று தங்கைக்குத் தேறுதலை சொல்லி அவளை அறியாது மைத்துனருடன் குறிப்பாய் நேத்திர சம்பாஷணை செய்து அவருடன் வெளிப்பட்டுத் தோட்டத்தை யடைந்து வெகுநேரம் பரம ரகசியமாய் வார்த்தையாடிக்கொண்டிருந்தார். இங்கே குணபூஷணி யம்மாளும் பெண்ணும் ஒருவாறு மனந்தேறி தனித்தனி பாஸ்கரனுக்கும் ஞானப்பிரகாசத்திற்கும் கடிதங்களெழுதி முடித்தார்கள். பின்னர் மீண்டும் கச்சேரி கூடத்துட் பிரவேசித்த சுந்தரேச முதலியாரும் சத்திய கீர்த்தி முதலியாரும் அடுத்த வாரத்து ஸ்டீமரில் சென்னைக்குக் குடும்ப சகிதராய் புறப்பட உத்தேசித்திருந்த விஷயத்தைத் தெரிவிக்க தாயும்பெண்ணும் மனோர்ச்சாகமடைந்து பள்ளியறையேகிக் கவலை யொழிந்த மனத்தராய் நித்திரை செய்தார்கள். ஊழியர் பலரும்மாளிகையின் முக்கிய அறைகளுக்குக்காப்பிட்டுத்தத்தம்மிடம்சென்று உறங்கினர். மைனரும் முதலியாரும் மட்டுமே பர பரபிரஸ்னோத்திரங்களில் அர்த்தராத்திரி வரையில் காலட்சேபம் செய்தனர். முடிவில் சுந்தரேசர் உமக்கு இந்தச்சந்தேகம் முதலில் எப்படிதோன்றிற்று என்று விசாரிக்க ச்சத்திய கீர்த்தியார் கூறுவராயினார்.

"பாசீனில் பிரபுகண்டிராக்டராய் வாழ்ந்திருந்த அண்ணன் மோகம்பர முதலியார் இறந்தது முன் மார்பிற் காயம்பட்டல்ல. பின் முதுகு வெட்டென்றே டாக்டர் சித்தாந்தம் செய்த விஷயம் உமக்குச்செவ்வனே தெரிந்ததே அண்ணன் இரண்டாந்தரம் வதுவை செய்த ஆசை நாயகி மோகனுங்கி தம்பி சுந்தரத்தை ஆலிங்கனம் செய்த கோலத்தைச் சடுதியிற் கண்ட அண்ணன் கைத்தடியினின்றும் உருவிய வாளால் வீச எத்தனித்தது வியக்தமாவதால் தம்பி ஆயுதப்பிரயோகம் செய்திருந்தால் அண்ணன் முன் மார்பே காயமடைந்திருக்க வேண்டுமல்லவா? மேலும் 3-ம் நாள் சில சுதேசிகள் பாசீனை யடுத்த மூன்று நான்குமயில் தூரத்தில் உள்ள ஓர் கிணற்றில் பேய்கொண்டவள் போல் மோகனுங்கி குதித்துப் பிராணனை விட்ட விஷயத்திற்கும், அவளைப் பின் தொடர்ந்து சித்தம் கலங்கியவன் ஒருகல் தூரத்தினின்றும் ஓடிவந்த பால்யனொருவன் அவளடைந்த கதியை அவர்களால் கேள்வியுற்று காட்டு மார்க்கமாய்ப் பறந்தான் என்னும் உண்மைக்கும் மாஜிஸ்ட்டிரேட்டு சமுகத்தில் சாட்சியும் சொல்லவில்லையா? இதுவன்றி அண்ணன் இறந்த காயம் தம்பி மோகனுங்கியைப் பின்தொடர்ந்து ஓடிய காலத்திற்கு 7, 8 நாழிகை பிற்பட்டே யடைந்ததென்று அனுமானிக்க இடமுண்டென்று டாக்டர் சாட்சியம் கூறியும் உளரே. இந்த ஆதாரங்களே என் சமுசயத்திற்கு காரணமாயுள்ளவை. தெய்வ சகாயத்தாலும் நம்முடைய பல முயற்சிகளாலும் சத்தியம் பிரகாசமாகும் முடிவில்" என்று இவர் முடிக்க அர்த்தராத்திரி மணியடித்தது. நித்திரையும் இவர்கள் கண்ணை மயக்க ஆரம்பித்து. பிரயாண விஷயமாய் இரண்டொரு விஷயங்களைப் பேசி முடித்து அவரவர் படுக்க லறையை யடைந்து சூக்கும சரீர சஞ்சாரஞ் செய்தார்கள் நம்மனோர்.

(தொடர்புண்டு)

வி. முத்துக்குமாரசாமி பி. ஏ.

# சூளாமணி நாடகம்.

---

## அங்கம்—I.

## களம்—1.

இடம்—போதனபுரி.
காலம்—காலை

ஆர்கலி யிலமா நிலக்கணி கலனாப்
பரதகண் டத்திற் பரிதிபோ லரணுடைத்
துறக்கத் தினுநற் றூயமா நகரமா
மெனச்சொற் றற்கிட னாகி யிருந்தொளிர்
ஆவணங் களானு மணிமா டங்கள்
கூடங்க ளானுங் கோபுரங்க ளானும்
வித்யா தரர்தம் வியனுல கையாய்ந்
தேய்ப்பித்த தென்ன லாக விலங்கிடும்
போதன மென்றொரு பொன்னக ருண்டால்.
அந்நகர்க் கதிப னடுத்துயி ரோம்பும்
பயாபதி யபிதா னப்பெயர் படைத்தோன்;
இவ்விறை நாட்டினி லிரவலர்க் காணாப்
புரவல ராகப் புக்கவர் வாழ்ந்தனர்.
புலிப்போத் தாடும் புக்கொரு துறையிற்
புனலை யருந்திப் போதரு மோர்பால்.
பாப்பின முறையும் பாயகா குழையுள்
காலூ ரக்குழ கனிவொடு வதியும்.
கண்டீ ரவம்பல கருமதக் கரிகளின்
நாகிளங் குட்டிக ளோடுநன் காடுமால்.
அறம்பொரு ளின்ப மறிந்தவ னுளார்கள்
இல்லற நெறிநடந் தெய்துவர் வீட்டை.
காளையர் காம வேட்கணை யாலலா
தாள்வய வேந்த ரம்பினா னவிவிலர்.
குடிகடா மாகக் குடியிறை யீவரால்.
மன்னனுந் தானென மதித்தில னாகி
இறையுங் கோணா தினிதுயி ரோம்பலால்
பிரஜா பதியெனப் பேசக் கிடப்பனால்.
இன்னண மாங்கா விறைவன் மணங்கொள

விருப்புள ளுத்தம் வியன்குலக் கொப்ப
அரய குலத்துதித் தணிபெறவிருந்த
**மிகாபதி** தேவியை விழைந்தனன் மணந்தான்,
அவட்பினுட் சசியையு மங்ஙன மேகொடு
வதிதரு நாடனில் மன்னுங் கவர்க்கு
ஒப்பிலா மணியாய் நுதற்கிடு வுயரிய
திலதம் மானவுந் திகழ்ந்தன ளுமரோ.
பெண்மை யழகதாற் பெருமகண் மானவும்
நாடொறுங்கேட்பி னவம்நவ மாகவே
பொலியும் மழலையாற் பொய்யினு மகளே
மானுமவ் வாண்முக மாதரா ரையனுக்
காவிபோன் றனரவ ருயினு னவர்க்குயிர்
ஆக, நல் வதூவரு மரயனுங் குழுமி
கற்பகத் தருவுங் காமவல் லியும்போல்
வாழ்க்கை நலத்தினல் வதிதர லாயினர்.
இன்னணஞ் சின்னு ளினிதிருந் தலுமிறை
முன்றவப் பேற்றுன் முழுதுல குஞ்சிறப்
படையுமா றமரராங்கற் பகநாட்
டாண்டகை யொருவ னரசன் முதன்மனை
**மிகாபதி** வயிற்றும், விரும்பிய மற்றவன்
சசிவயிற் றும்பிறந் தாகித் தழைத்தனர்.
அவருண் முன்னவ னம்புலி கிகர்த்தவன்
வெண்ணிறக் காளையன் வெற்பல பத்திரன்
சொரூப னுகத் தோன்றினன்; பின்னோன்
காயா மலர்கிகர் கருநிறத் தண்ணல்
கிருட்டின னெப்பக் கிளர்ந்தன னுமரோ.
அற்றைப் புலவரு மலர்மலர் மாரியு
மாசியும் பொழிந்த னரப்புந் தெளிந்தது;
இருகில னேங்க வெங்கும் விளக்கொளி
யிட்டனர்; தூரிய மிசைத்தன ரார்த்தனர்
எண்டிசா முகமு மெதிர்கம் பலையுற;
உத்கோ ஷித்தன ருவரியு மடங்குற.
மாகதர் வழுத்த வந்தியர் துதிக்க
மாதரா ரிசைக்கு மங்கலப் பாட்டொடு
**விஜயன் திவிட்டனு** விளம்பினர் நாமம்.
இட்டநா மத்தா லினைஞரவ் விருவரும்
மங்கையர் கண்ணு மனமுமொன் றுக

தம்மைவிட் டகலாத் தன்மைய் வாக்கினர்.
இந்துவை மானுமவ் வெழிவிளஞ் சிறுர்கள்
நாளும் வளர்வுற, நாயகன் றுயிலொரீஇக்
காலைக் கடன்முறை கவினுற வாற்றியாண்
டம்மகார் புடைவர வாயநல் வரிசையோ
டாயினன்; பளிக்கொளி யமைவுறப் போழ்ந்த
பலகைகண் குலவப் பரப்பிநன் னீலம்
விளங்கொளி விளிம்பில் வெம்பொனு லாக்கிய
வேதிகை வெள்ளி வேயுட் டுளங்கொளி
பவளத் திண்காற் படர்கதிர் மணிதவழ்
வசுந்தரை வளங்கவின் றனையதாம் மண்டப
மலியப் புக்கனன் மன்னரே ருண்டு.
தம்மோ டடைந்த தனிப்புரோ கிதனைச்
சொல்லே ருழவரைத் தோற்றவி சிடையே
ஆக வாக்கின யளித்துத் தானுமோர்
மடங்கலா தனத்தின் மகிழ்வுட னிருந்தான்.
மற்றைய வேந்தரு மன்பத மிறைஞ்சி
யேவலின் வண்ண மிருந்தனர் தவிசில்.
தலைவனற் சிறுர்க டந்தையை யண்மு
மிருக்கைக் கிடந்தனர் எந்தல்வா யிலனை
விளித்துக் "காவல! விளம்புவல் கேணீ."

**காவலன்:**—அறைகுதி ரயை வாண்டகா யண்ணல்!

**அரசன்:**—"கடிகையே ழிற்றைகா றுங்காண் பவர்வரின்
விடுதியன் னோரை விடுதிநீ யப்பா."

**காவலன்:**—ஆக்குவே னைய! அன்னண மேயான்.

**அரசன்:**—"ஆயி னன்றுநீ யாகுவாய் னின்னுழை."

**காவலன்:**—சேர்ந்தேனைய! செவ்வனே வாழிரால்

(காவலன்செல்லலும்,அக்காலையில்முக்
காலமுமுணர்ந்தவனுய்வந்த)

**நிமித்திகன்:**—"காவலோய்! காவலன் காண்டற் குரியனோ?"

**காவலன்:**—உரியர்தா மவருழை யுமைவிடுத் தேனல்
எகுதி ரைய! வெம்மிறை மாட்டே.

**நிமித்திகன்:**—"ஆயின் செல்லுவ னப்ப!நீ வாழி"
எனச்சொற் றுனு யேந்தல்பா லேகலுங்,
நோக்கா னுயிறை நொய்தினோ ரிருக்கை
யளிப்பித் தனிடை யமர்த்தின னுமரோ.

நிமித்திகன்:—அமயமோர்ந் தானு யரயனை விளித்து,
"கிளத்துவல் கேண்மோ கிளரிளந் தொடையீர்!"

அரசன்:—"அஃதெவ் வகைத்ததோ வறைகுதி ரைய!"

நிமித்திகன்:—மற்றோள் வேந்தே! மாநிலம் புரக்கும்
பயாபதி யரசே! பரியா ளத்தவா!
நேற்றைக் கங்குலி னேர்ந்தநற் கனவி
லாம்பலொன் றந்தர மிடையிழிந் திவணாய்
வெண்பூந் தொடையலை விரும்பிநும் மிளவல்
உரத்திடை செரித்து வுடனெடுத் தும்பர்
நாட்டைப் புகுதர நான்கண் டனனால்.

அரசன்:—"அங்ஙன மா?அதன் பயனறை குதிரால்."

நிமித்திகன்:—இயம்புவ னிறைவ வினிதே கேட்டியால்:—
விஞ்சைய னேகன் விரும்பித் தன்மகள்
வனிதையர் மணியை வள்ளறி விட்டனுக்
கீந்துக் கடிமண மியற்றிப் போவனால்.
மஞ்சுதோய் புரிசை வளநக ரண்ணலே!
இருநான் ககவினி விறைவனன் னிருப
மேந்திப் புட்மா காண்டமென் னும்நும
தருமலர்ச் சோலையி லமர்வனு லொற்றன்.
சரதமீ தைய! சாருநாள் காணீர்.

அவையோர்:—வியப்பெய் தினமால் வியன்குணத் தரசே!
நிமித்திகற் சொற்றவை நிச்சய மாகுமால்.
திவிட்ட னன்னணந் திருமண மெய்துவன்
ஐயமி லதற்கு வண்ணறேக் குதிரால்.
நாற்றிய தொங்கலி னல்லாய் பயாபதீ!
பாக்யமே நினது பாக்யமே பாக்யம்
என்னக் கிளத்திச் சிறிதுபோழ் திருத்தலும்
நாழிகைப் பறையை நற்செவி மடுத்த

அரசன்:—(அவையினரைவிளித்து)
நானிவ ணகி நாழிகை பலகடந்
தடித்தது பறையுமே; அவையுள யாவரு
மகக்கே குதிரா லடியனுஞ் செல்வேன்.

அவையோர்:—ஆமாண் டகையே! அங்ஙனம் புரிவமால்.
(யாவருஞ்சென்றனர்.)
(இன்னும்வரும்)

வி. கே. அரங்காசாரியர்.

# THE UNCHANGING EAST.

## மாருக் கீழ் நாடு.

'மாருக் கீழ் நாடு' என்பது மேல்நாட்டா ரெல்லோராலும் ஸ்திரமாக அங்கீகரிக்கப்பட்டதோர் வாசகம். அதைக்கேட்கும்போது நமக்குக்கோபம் பிறக்கலாம். ஊன்றி யோசிப்போமானல் அவர்கள் சொல்வது சரியென்று தெரியும். நாமும் பேசுவதிலும் நடப்பதிலும் ஒவ்வொரு நாளும் அவ்வாசகத்தை ஒப்புக்கொள்ளுகிறோம். நமக்கு சட்டம் மனுவும், யாக்னவல்கியரும் எழுதிவைத்திருக்கிறார்கள். வைத்தியம் அகஸ்தியரும் போகரும் கண்டுபிடித்திருக்கின்றனர். நம் கைத்தொழில்கள் நம் இதிகாசங்கள் எழுதப்பட்ட காலத்தில் எப்படியிருந்தனவோ அப்படியேதான் இப்போதும் இருக்கின்றன. தத்துவ சாஸ்திரங்களுக்கு முடிவு உபநிஷத்துக்களில் முடிந்து விட்டன. ஒவ்வொரு விஷயங்களிலும் மேல்கண்ட நூல்களில் சொல்லியிருப்பவைகளை எவனொருவன் மறுக்கின்றானோ அவனுக்கு தெய்வபக்தியற்றவன், மதப்ரஷ்டன், சாதிப்ரஷ்டன், தேசபக்தியற்றவன் என்ற பல பெயர்கள் இப்போதும் வெகு சுளுவில் கிடைத்து விடுகின்றன. அதாவது நாம் மேற்கண்ட நூல்கள் எழுதப்பட்ட காலத்திற்கும் இப்போதைக்கும் மாறுதல் ஒன்றும் அடைந்தோமில்லை யென்று ஒத்துக்கொள்ளுகிறோம். அந்நூல்கள் எழுதப்பட்டு ஒரு ஆயிரம் வருஷங்களுக்குக் குறையாமலிருக்கும். ஒரு ஆயிரம் வருஷங்கள் நம்மில் ஒரு வித்தியாசத்தையும் கண்டதில்லையானல், நாம் எப்போதுதான் மாறப்போகிறோம். நம்மைச்சுற்றி இருப்பவர்களெல்லாம் மாறிக்கொண்டேயிருக்கிறார்கள். 1000-வருஷங்களுக்கு முன் ஒரு ஜாதியாராக இருந்ததே தெரியாத ஆங்கிலேயர் இப்போது உலகத்தில் ஒப்பு உயர்வற்ற ராஜ்யத்தை ஆளுகிறார்கள். சென்ற நூற்றாண்டில் பலமற்று க்ஷீணதசை அடைந்திருந்ததாக நினைக்கப்பட்ட ஜப்பான் ராஜ்யம் இப்போது உலகராஜ்யங்களில் தலைமை பெற்ற தொன்றுடன் சண்டைசெய்துகொண்டு வெற்றியை எதிர்நோக்கி நிற்கின்றது. ஆயிரம்வருஷங்களுக்குமுன் உலகாதிபத்யம்அடைந்ததாகச்சொல்லப்பட்ட ரோமராஜ்யம் இருந்தவிடம் தெரியாமல் மறைந்திருந்து 40, 50 வருஷங்களுக்கு முன் தான் தலை தூக்கிப்பார்க்க ஆரம்பித்திருக்கிறது. இப்போது நாம் தினம் பார்க்கும் விஷயங்களில் எவ்வளவு 1000-வருஷங்களுக்கு முன் இருந்திருக்கின்றன. மின்சாரம் இப்போது சமாசார மனுப்புவதற்கும், வண்டியோட்டுவதற்கும், விளக்குக் கொளுத்துவதற்கும் பங்கா இழுப்பதற்கும் உபயோகப்படுகிறது. இவைகளை ஆயிரம் வருஷத்திற்கு முன்னிருந்தவர்கள் கனவிலும் கண்டிருக்க முடியுமா? முன் இங்கிருந்து இங்கிலாந்து தேசம் போவதாக நினைக்கவும் முடியுமா? இப்போது 2 மாசம் லீவ் வா

ங்கிக்கொண்டு ஆங்கிலேயர் இங்கிலாந்து போய்த் திரும்பி வந்துவிடுகிறார்கள். நம் வியாபாரம் முன் முழுதும் உள் நாட்டதாகவிருந்தது. இப்போது பெரும் பான்மை வெளி நாட்டதாய் விட்டது. நாம் உபயோகப்படுத்தும் நெருப்புக் குச்சியும் எழுது கோலுமல்லவோ ஐரோப்பா கண்டத்திலிருந்து வந்தவை. முன்னொருவனைப் பற்றித் தெரிவதானால் அவனூர்க்குள்ளும் தெரிவது அபூர்வம். இப்போது அவன் கொஞ்சம் விசேஷமானவனானால் உலகமுழுதுமே அவன் பெயர் தெரிகிறது. முன் நம்மோடு போட்டி போட்டவர்கள் சுயகிராமத்தாரே. இப்போது உலக முழுதும் ஒரே போட்டி யாட்டமாயிருக்கிறது. முன்போல இப்போது பிழைப்பது சுலபமான காரியமல்ல. நமக்கு வேண்டியன முன்போல சிலவேயாயிருக்கவில்லை. ஒரு பைசா லாபம் வேண்டுமானால் வெளியூரார் நம்மூர்க்கு வந்து விடுகிறார்கள். நிலத்தில் முன்போல வெள்ளாமை இல்லை. அதிலும் சர்க்கார் வரியும், சாவுக்கார் வட்டியும், வக்கீல் சுங்கமும் கொடுத்துப் பார்த்தால் மீதியொன்றும் இருப்பதில்லை. கல்யாணமோ காதுக்குத்தோ வந்தால் நிலத்தை அடமானம் வைத்துத்தான் ஆகவேண்டும். அடமானத்துக்கடுத்தது கோட் வியாஜ்யம், அதற்கடுத்தது நில விக்கிரயம். இம்மாதிரியாக விற்பனையாகும் நிலத்துக்குக் கணக்குவழக்கில்லை. 40, 50 வருஷங்கள் சேர்ந்து ஒரு குடும்பத்திலேயே இருக்கும் நிலங்கள் மிகக்கொஞ்சம். வீண் வளர்த்தி யென் ? நம்மைச் சுற்றியுள்ள விஷயங்களெல்லாமே மாறியிருக்கின்றன. ஆனால் நாமும் நம் கொள்கைகளும் மாத்திரம் இன்னும்மாறவில்லை. இம்மாதிரியாகவே நாம் இருந்து விடுவோமாகில் நாம் ஒரு ஜனக்கூட்டமாக முன்னுக்கு வர முடியுமா? ஒருபோதும் முடியாது. மலைப் பிரதேசங்களில் விளையும் மொட்டக்கோஸ் போன்ற ஒரு செடியை மதுராவில் கொண்டுவந்து நட்டால் அது உடனே கெட்டுப்போகும். ஏன்? ஒரு வஸ்துவுக்கும் அதன் சுற்றிலுமுள்ளவைகளுக்கும் ஏற்புடைமை வேண்டும். அப்படி யில்லையானால் அவ்வஸ்து வளர்ச்சி குன்றி க்ஷீணித்து நாசமாகும். காட்டில் சஞ்சரிக்கும் ஒரு மிருகத்தைக் கூட்டில் அடைத்தால் அது சீக்கிரம் இறந்து போகிறது. அல்லது வளர்ச்சியும் செழிப்பும் இன்றிக் கெடும். அதேமாதிரி தானே மனித சமூகங்களுக்கும் ஜனங்களுக்கும் அவர்களைச்சுற்றியுள்ள விஷயங்களுக்கும் ஏற்புடைமை இருப்பின் அவர்கள்விர்த்தியாகி முன்னுக்கு வருவார்கள். இல்லாதவரையில் பலம் குன்றி பிறர் கைப்பட்டு மடிவார்கள். இவ்விஷயத்தைப்பற்றி இன்னொருமுறை விவரிப்போம் நாம் 1000 வருஷங்களுக்கு முன்னிருந்தது போலவே இப்போதும், இருக்கிறோம். ஆனால் நம்மைச்சுற்றி யிருக்கும் விஷயங்களெல்லாம் எவ்வளவோ மாறுதல்கள் அடைந்திருக்கின்றன. ஆகையால் நாமும் மாறுவிடில் இன்னும் சீர் குன்றி அழிவது திண்ணம். நம் நிலமை அவ்வளவு மோசமாகவில்லை. ஆங்கிலக் கல்வியும், பிறதேசச்சம்பந்தம் முதலியன காரணமாக நம்மில் அநேகர் தங்கள் கண்கள் திறக்கப்படுகின்றனர். நம் ராஜாங்கத்தாரும்

நம் கண்களைத் திறக்கப் பல நன் முயற்சிகள் செய்து வருகின்றனர். சிலதா கவே இன்னும் இருந்துவரும் இப்புது முயற்சிகள் பலப்பட்டு நம் தேச முழு திலும் புதுக்கொள்கைகள் பரவுமானால் சமீப காலத்தில் நம்மைப்போலவே இருந்த ஜப்பான் ராஜ்யம் இப்போது முன்னுக்கு வந்திருப்பதுபோல நா மும் முன்னுக்கு வரலாம். அம்மாதிரியாகப் புதுக் கொள்கை பரவுதலுக்கு ஆங்கில மொன்றுமே இதுவரை ஆதாரமாக இருக்கிறது. அப்படியிருக்குமா னல் ஒரு கற்பமானலும் போதுமானபடி புதுக்கொள்கைகள் பரவுதல் முடி யாது. ஜனங்களில் பெரும்பான்மையோர் பேசுவதும் எழுதுவதும் சுயபா ஷைகளிலேயே. அவர்கள் அவைகளை விட்டுவிட்டு ஆங்கிலத்தைச் சுவீகரிப் பார்களென்பது இம்மையில் இயலாததோர் இருங்கனவு. ஆதலின் ஆங்கிலங் கற்றோர் பத்திரிகை, புத்தகம், பிரசங்கம் இவைகள் வாயிலாக முயலுவார்க ளாகில் சீக்கிரத்தில் நம் குறை நிறைவேறலாம்.

இது வரை நாம் பழைய கொள்கைகளைவிட்டு புதுக்கொள்கைகளை அனு சரிக்கவேண்டு மென்றது, நாம் கொண்டிருக்குமவைகள் எல்லாவற்றையுமே விடவேண்டுமென்பது கருதியன்று. ஒவ்வொரு இடத்திலும் கொள்கை கள் இருவகைய. சில உலகமிருக்கும்வரை அழிதலில்லாதனவாய் என்றும் ஆக்ஷேபிக்க இடனின்றி இருப்பன. அவை தாம் 'உண்மை கடைபிபிடி' போல்வன. இவை ஒவ்வொரு காலத்தும் பெரும்புத்தியாளரால் தெரிந்து வெளியிடப்பட்டன. அவற்றை நாம் ஒரு காலத்தும் மாற்றவேண்டுவதி ல்லை. மற்றவை சமயத்துக்கும் இடத்துக்கும் தக்கபடிமாற்றவேண்டியவை. உதாரணமாக சமுத்திர யாத்திரை கூடாது என்பது முன் காலத்துக்கு ஏற் புடைத்தாக இருந்திருக்கலாம். ஆனல் அது இக்காலத்துக்கு ஒருபோதும் சரிப்படாது. இத்தகையவைகளை அறவே களைதலவசியம். நம்மனோர்கள் முதலில் இவ்வித்தியாசத்தை அறிந்திருந்திருக்கலாம். ஆனல் காலம் செல் லச்செல்ல ஒரு பெரியவர் ஸ்திரமான சில விஷயங்களையும், சமயோசித மான சிலவற்றையும் எழுதிவைத்திருந்தால் அவர் பெருமை காரணமாக அவர் சொல்லுவன வெல்லாம் ஸ்திரமென்று நினைக்கிறோம். இதுதான் தப்பு. உதாரணமாக கிறிஸ்தவேதபுஸ்தகத்தை எடுத்துக்கொள்வோம். அது தேவவாக்கியம். என்பது கிறிஸ்தவரெல்லோரும் ஒத்துக்கொள்ளுகிறார்கள். ஆனலும் அதிலிருக்கும் இயேசு கிறிஸ்துவின் மலைமேல் செய்த பிரசங்கம் போன்றன ஸ்திரமானவை யாகவும் மற்றவை சமயோசிதமானவை யென் றும் அவர்கள் இப்போது கொள்கிறார்கள். அப்புத்தகத்தில் சுவாமி 6 நாட் களில் உலகத்தைப்படைத்து 7ம் நாள் ஒய்வாகவிருந்தார் என்பதை உண்மை யில் படிப்புள்ள கிறிஸ்துவர்கள் எத்தனைபேர் நம்புகிறார்கள்? அதுபோலவே நாமும் நம் சாஸ்திரங்களிலும் இதிகாசாதிகளிலும் உள்ளனவற்றில் ஸ்திர மான உண்மைகளைக் கைப்பற்றி மற்றவைகளை அகற்றவேண்டும். இவ்விஷ

யம் நம்முன்னோர்களுக்கு முழுதுமே ஒற்றுமையற்றதல்ல வென்பதற்கு அத்தாக்ஷிநன்னூல் கடைசிச்சூத்திரமாகிய 'புதியனபுகுதலும் பழையனகழிதலும் வழுவல கால வகையினனே' ஒன்றேபோதும். பிற்காலத்தியவர்களாகிய நாம் இவ்வேற்பாட்டை நடவடிக்கைகளில் ஒத்துக்கொள்வதில்லை.

மாறுபாடுகளைச் செய்வதில் நாம் நம்மையே மறந்து அவசரப்பட்டுக்குளிக்கப்போன விடத்துச்சேறு பூசிக்கொண்டதுபோலக்கெடுதல் நேரிடக்கூடிய வழிகளில் முயற்சிக்கக்கூடாது. சென்ற நூற்றாண்டின் ஆரம்பத்தில் நற்கொள்காபிமானத்தின் பொருட்டுச் செய்யப்பட்ட முயற்சிபோன்ற பெரும் முயற்சி முன்னெப்போதும் செய்யப்பட்டதில்லை. அப்போது பிரெஞ்சுக்காரர் இவ்வுலகம் முழுதிலுமே 'மனிதர்களெல்லோரும் சகோதரர், சமானர். பொது நிலைமையே எப்போதும்கையாடத் தக்கது' என்னும் அருங்கொள்கைகளை ஸ்தாபிக்க முயன்றார்கள், ஆனால் அவர்கள் பெருங்கலகம் விளைவித்து வெகு சீக்கிரம் பழைய விஷயங்களைத்தொலைக்க முயன்றார்கள். ஜனசமூகம் உயிரில்லாப் பிராணியன்றே? அதை மனதுக்கு வந்தபடி நிமிஷத்தில் திருத்துதல் இயலுமா? வெளி ஜனங்களுக்கு இவர்கள் செய்வதில் அவநம்பிக்கை பிறந்தது. கடைசி முடிவென்ன? 'கணக்கிட முடியாதபடி ஜனங்கள் பட்டு மாய்ந்தனர். உலக நாகரீக விர்த்தி ஒரு நூறு வருஷங்கள் தடைப்பட்டது' என்று ஒரு பெரிய ஐரோப்பிய தத்துவ சாஸ்திரி கூறுகின்றார். ஆகையால் நம்மவர்களும் தங்களுக்குச் சீர் திருத்தத்துள்ள ஆர்வம் தங்களையே மறக்கும்படி செய்யவிடக்கூடாது. மனிதர்களுக்குள் ஜாதி வித்தியாசமிருப்பது பொது ஜன விர்த்திக்குப் பிரதி கூலமாக விருக்கலாம், ஆனால் உடனே பறையனும் பார்ப்பானும் ஒன்றென்று சொல்லி இருவரும் சேர்ந்து சாப்பிடக் கூடாது. அது மற்றவர்களைப் பிரமிக்கச்செய்யும். சீர் திருத்தக்காரர்கள் தனியே விடப்படுவார்கள். அவர்கள் சொல்லைக் கவனிப்பவர்களும் இல்லாமற் போய்விடும். அதன்பின் அவர்கள் முயற்சி பயனற்றதாகும் அவர்கள் வாழ் நாளும் கஷ்டங்கள் மிகப்பொதிந்தனவேயாம். முதலில் ஒருவன் ஒரு ஜாதியிலுள்ள உட் பிரிவுகளை ஒற்றுமைப்படுத்திப் பின் பெரும் பிரிவுகளை அணுகுவானாகில் அவன் முயற்சி பயனிலதாகாது. தன் முயற்சியில் சாக்கிரதையாக இருப்பதாலேயே ஒருவன் தன் கொள்கைகளை விட்டுவிட வேண்டுவதில்லை. ஆனால் அவைகளை அனுசரிப்பதில் மாத்திரம் கொஞ்சம் பிறளவேண்டும். இதுதான் உலக முறைமை. இப்படிச் செய்யாததால் எத்தனை பெரும் புத்தியாளர் துக்கத்தி லாழ்ந்தார்கள்? ஆங்கில மகாகவி ஷெல்லி (Shelley) யும் அவருள் ஒருவரன்றோ? அவர் காவியங்களைப் படித்துப் புகழாதவர்கள் யார்? ஆனால் அவர் கொள்கைகளைக் கைப்பற்றி அவைகளை இவ்வுலகில் அனுசரிக்கவேண்டும் என்பவர்கள் எத்தனைபேர்? இவ்விஷமாக தங்கொள்கைகளில் ஆர்வம் மிக்கவர்களை அவர்கள் பெருந்தன்மைக்கும்

சுயநலம் பாராட்டா வன்மைக்கும் புகழ்ந்து அவர்கள் தங்கள் ஆர்வங்காரணமாக இடர்ப்படுதெற்கு வருந்தி அவர்கள் மீது குறை கூறுது இருத்தலே நம் கடமை.

T. A. Ramalingam, B. A.

---

## RECENT TAMIL LITERATURE.

## நவீன தமிழ்ப் புத்தகங்கள்.

---

1. **வெனிஸ் வர்த்தகன்:—** இது ம-௱-௱-ஸ்ரீ எஸ். வி. கள்ளபிரான்பிள்ளை (B.A.) அவர்களால் இயற்றப்பட்டபுத்தகம்; சென்னைத்திராவிட பாஷாராய்ச்சிச்சங்கத்தாராற் பிரசுரிக்கப்பட்ட கைம்முறை. ஆங்கிலநாடக கிரந்தகர்த்தரான ஷேக்ஸ்பியர் நாடகத்தை உரையிடையிட்ட நாடகத்தமிழில் பிள்ளையவர்கள் எவர்க்கும் நன்குவிளங்குமாறு எழுதியுளர். புத்தகவெளிப்பாடும் யாவரும் பாராட்டக்கூடியவண்ணமே யுள்ளது. இத்தகைத்தானபுத்தகங்களே மேனுட்டாரது புத்தகங்களை நம்மனோர்க்கு நன்குவிவரித்துக்காட்டக்கூடியசாதகங்கள். மேனுட்டார் கலைஞானங்கள் நம்மவர்பொருள் ஆகவேண்டிய காலமுமிதுவே. ஏனெனில் நம்மவர்வேதமாதியவை யெல்லாம் இன்னோர் உரிமையாய்விட்டனவன்றோ? சொற்பொலிவும், கருத்தமைதியும் இதிலேகாணுமாறு இதுபோன்ற இதரமுறைகளிற் காணுதல்கூடாதென்பது பலர்அபிப்பிராயம். அதனை உண்மையென்றே கூறலாம். நமதுபிள்ளையவர்கள் இதுபோன்ற மொழி பெயர்ப்புப் புத்தகங்கள் பலவற்றை வெளிப்படுத்தும்கருத்துடன் இருக்கிறார்களென்றறிந்து குதூகலமடைந்தனம். பள்ளிப்பிள்ளைகளுக்கும் மேனுட்டுப் பிரபந்தங்களைப் படித்தறியும் அவாக்கொண்டவர்களுக்கும் வெனிஸ் வர்த்தகனுல் மிகவும் லாபமுண்டாகுமென்பதற்குச் சந்தேகமேயில்லை. புத்தகத்தின் விலை ரூ-1.

2. **ஹேமாம்பரி:—**

இப்பெயர் கொண்ட தமிழ்க்கதை லோகோபகாரி சப் எடிடர் விசாலாட்சிஅம்மாளவர்களால் எழுதப்பட்டு தற்காலம் திருவாங்கூர் சமஸ்தானம் திவானுகவிருக்கும் ம-௱-௱-ஸ்ரீ. V. P. மாதவராயரவர்களுக்கு அர்ப்பணம் செய்யப்பட்டது கிடைக்கப்பெற்றோம். கதை மிகஇனிமையானது. முழுதும் அம்மாளவர்கள் புத்தியிலிருந்தே வெளிவந்தது. தற்காலசாமான்யவிஷயங்களிலிருந்து புத்தியைகிரகித்து தன்சாமர்த்தியத்தால் ஏற்படுத்தப்பட்ட ஓர்புதுஉலகில் நிறுத்துவது வியக்கத்தக்கது. கதையில் மிக அதிகமாக உபயோகப்படுத்தப்பட்டிருக்கும் சமஸ்கிரதபதங்களே அம்மா

ளவர்களின் சமஸ்கிரதபுலமைக்கு அறிகுறியாகும். அம்மாளவர்களுக்கு ஆங்கிலமும், கன்னடமும் தெரியுமெனக்கேட்க மிகச் சந்தோஷிக்கிறோம். இக்கதாசிரியர்தாமே இன்னும் பலகதைகளையும் எழுதியிருக்கிறார். இம்மாதிரியாகக் கல்வியில் தேர்ச்சிபெற்று உலகிற்கு நன்மையுண்டாகும்பொருட்டு நூல்கள் எழுதி வெளிப்படுத்தக்கூடிய மாதுசிரோன்மணிகள் இருக்கும்பொழுது நம் இந்தியாமுன்னுக்கு வருமோவென்னும் சந்தேகத்துக்கு இடம் அதிகமில்லை. இக்கதை முன் மைசூரிலும் இப்போது திருவாங்கூரிலும் பெண்கல்வி விஷயமாகவும் அதுபோன்ற மற்றவிஷயங்களினும் தலைப்பட்ட ம-ா-ா-ஸ்ரீ. மாதவராயரவர்கட்கு அர்ப்பணம் செய்யப்பட்டதும் பொருத்தமானதே.

**3. சத்தியவிஜயம் அல்லது அரிச்சந்திரன் சரித்திரம்.**

இச்சிறியபுத்தகம் இனிய தமிழ் வசன நடையில் தமிழ்நாட்டுச்சிறுவர் சிறுமியர்கள் படித்துணரும்படி சத்தியத்தையே விரதமாய்க்கொண்டு விஜயம் பெற்ற அரிச்சந்திரன் சரித்திரத்தைச் சுருக்கி எழுதப்பட்டுள்ளது இடையிடையே பொருத்தமாகிய பழமொழிகளும் அரிச்சந்திர புராணச் செய்யுள்களும் உபயோகிக்கப்பட்டுள்ளன. இது ஸ்ரீ. தோட்டக்காடு. இராமகிருஷ்ணபிள்ளை, B. A. அவர்களின் வேண்டுகோளின்படி நமச்சிவாய முதலியாரால் எழுதப்பட்டுள்ளது. மதராஸ்லிடரரி பூரோ வுக்காக எழுதிவெளியிடப்படடது. அரிச்சந்திரன் சரித்திரசாரமடங்கிய கையேடெனல் பொருத்தமுள்ளதாகும்.

**4. தமிழ் இரசாயனசரித்திரம் முதற்புத்தகம்:**-சாத்திரசம்பந்தமாய்ச் சிறுவர் சிறுமியர்கள் தமிழ்ப்பாஷைவாயிலாக படித்தறிந்துகொள்ளத் தபலபாடங்கள் இச்சிறு புத்தகத்திலடங்கி யிருக்கின்றன. பாடத்திலடங்கிய விஷயங்களைநன்குணரப் பொருத்தமாகிய படங்களும் ஆங்காங்கே சேர்க்கப்பட்டுள்ளன. இவ்வகைப்புத்தகம் தமிழில் இதுகாறும் வசனநடையில் யாராலும் எழுதிவெளிப்படுத்தப்பட வில்லை. ஆங்கிலேயபாஷையில்எழுதப்பட்டுள்ளன இவ்வகைவிஷயங்களை நம்தமிழ் நாட்டுமகாஜனங்களும் சிறுவர் சிறுமியர்களும் படித்துணரும்விதமாய்த் தேசபாஷையில் எழுதிவெளிப் படுத்தியது தமிழ்நாட்டின் க்ஷேமத்திற்கு இன்றியமையாததோர் பேருபகாரமாம். இதன் பயன்கருதி இதை இவ்விதமாக பிரசுரம் செய்தல்வேண்டு மென்று வினைப் பூட்டியவர் சூளும்பேடு ஜமீன்தாரவர்களாம் கனம்வாய்ந்த முத்துக்குமாரசாமி முதலியார், B. A. அவர்களேயாம். மதராஸ் லிடரரிபூரோவின் பரிமாலகர்களுக்காக இது எழுதிவெளியாக்கப் பட்டிருக்கின்றது. ஆங்கிலேயபாஷையுணராத தமிழ்வல்லவர்களுக்கு இப்புத்தகத்தின் சங்கதிகள் புதியனபுகுதல் எனும் வழியாற் புதுக்கருத்தமைதியுள்ளவைகளேயாம். இவ்வகைச் சாத்திரசம்பந்தமான நூல்கள்மலிந்தால் தமிழ்நாடு அபிவிர்த்தியாகும். இதுநிச்சயம்.

# DEPARTMENTAL NOTES.

## பல்துறைக் கலாவிசேடக் குறிப்புகள்.

---

### 1. Agricultural.

**சோளவிளைவுக்கேற்ற நிலம்.**

இது புஞ்சைக்காட்டிலும், தோட்டங்களிலும், குளத்தின் உள்வாய் நிலங்களிலும், அதிகத் தண்ணீரில்லாத கால்வாய் நிலங்களிலும் மிகுதியாகப் பயிரிடினும், நொய்க்கரிசல் நிறமே சிறந்தது. செவ்வல் நிலத்திற் பல விதக் கார்சோளம் விளைகின்றன.

**சோளத்துக்கு வேண்டிய உழவு.**

சோளப்பயிருக்கு நல்ல கலப்பையால் நான்குழவு போடுவது வழக்கம் பல்லாரி முதலான சிலவிடங்களிலுள்ள கரிசல் நிலங்களில் 12 மாடுகள் கட்டிய பந்துக்கலப்பையால் உழுவதில் வேர்கள் ஆழத்தில் இறங்கப், பயிர் மதாளித்து நல்ல லாபத்தைத் தருகிறதன்றியும், மழைக்காற்றுக்குப் பயிரும் சேதமாவதில்லை. ஆகவே, சோளத்துக்கும் ஆழமாக உழுதல் உத்தமம்.

**சோளத்துக்கு ஏற்ற எரு.**

சோளத்துக்குத் தொழுஎருவே சிரேஷ்டமாயினும், சோளம்அறுவடையான பிறகுபூமியை உழுதுஅதிற் கொள்விதைத்து பூப்பிடிக்கும் தருணத்தில் உழுதுவிட்டால் நல்ல எருவாகும். கடலை துவரை முதலிய கோதுப் யிர்களின் செடி கொடிகளை மக்கவைத்துப் போடுவதிலும் பலன் அதிகமாகக்காணும். மேலும் ஒரே யிடத்தில் அடிக்கடி சோளத்தைப் பயிரிடாமல் இடத்தை மாற்றிப் பயிரிட்டால் நன்ருக விளையும்.

### 2. Industrial.

**பாலைப் பொடியாக்கும் யந்திரம்:**—ஜர்மனி தேசத்திலுள்ள காதென் பர்க்கிலிருக்கும் டாக்டர், எம். எகன்பர்க் என்பவர் ஒரு நூதனயந்திரத்தைக்கண்டுபிடித்திருக்கின்றார். இவ்வியந்திரம் பாலைப் பொடிசெய்யக்கூடியது. இப்பொடி பார்வைக்கு மாவைப்போலவே யிருக்குமாயினும் ஈரம்ஒன்றுதவிர பாலின்மற்றெல்லாக் குணங்களையும் தன்னுள் அடக்கியுள்ளது. இது தண்ணீரில் முற்றும் கரைந்துவிடும். ஆகையால் பாலைஎவ்வெக்காரியங்கட்கு உபயோகப்படுத்தலாமோ அவ்வக்காரியங்கட்கெல்லாம் இப்பொடியைத் தண்ணீரில் கரைத்து உபயோகப்படுத்தலாம். இப்பொடி புளித்துபபோவதுமில்லை. கெட்டுப்போவதுமில்லை. தகரடப்பிகளில் வைத்துக்கொள்ளலாம். அப்படியேஎங்குவேண்டினும் அனுப்பலாம். சேதமாகாது. தற்காலம் வெண்ணை யெடுக்கப்பட்ட பச்சைப்பாலை வீணுக்குகின்றனரேயன்றி

அதிகமாக உபயோகப்படுத்துவதில்லை; அதிகப்பாலுக்கு ஒருங்கே தேவையின்மையால். இனிமேல் அப்பாலை வீணுக்கவேண்டுவதில்லை. இப்புது யந்திரத்தினுதவியால் அதைப்பொடிசெய்து வெவ்வேறிடங்களுக் கனுப்பலாமன்றே.

3. Educational.

**ஜப்பானுக்குச் செல்லும் இந்திய வித்தியார்த்திகள்:**—தற்காலம் இந்தியாவிலிருந்து ஜப்பானுக்குச்சென்று பலவிஷயங்களையும் கற்றுவரவேண்டும் என்னும் அவா நம்மவருட் சிலருக்குண்டாயிருப்பதால் அவர்கட்குப் பயன்படத்தக்க சில விஷயங்களை ஈண்டு எடுத்துக்கூறுவது வியர்த்தமாகாது. இவ்வவாவுள்ளவர்கள் கவனிக்கவேண்டியது.முதலாவது ஜப்பானியரின் பாஷை, அங்கு பிரசங்கங்கள் அப்பாஷையில் செய்யப் படுகின்றனவாகலின். இப்பாஷை கற்றுக்கொள்வதற்கு கடினமானதல்ல. ஏறக்குறைய ஏழெட்டு மாதம்வரை அதில் உழைத்துவந்தால்போதும். வெளியுதவி யில்லாமலே அப்பாஷையி லேற்பட்டிருக்கும் வாசகபுத்தகங்களைக் கொண்டு அறிந்து கொள்ளலாம். வெளியுதவிவேண்டினும் இந்தியாவிலேயே கிடைக்கக் கூடியதாயிருக்கிறது. கொஞ்சகாலத்திற்குமுன் ஜப்பான்சென்று திரும்பி வந்த மிஸ்டர் பூரன்சிங் என்பவர் லாகூரில் Diamond Jubilee Technical Institute ல் ஜப்பானீஸ் பாஷையைக்கற்பித்து வருகின்றார். ஆகவே வித்தியார்த்திகள் ஜப்பான்போகுமுன்னரே அத்தேசபாஷையை அறிந்துகொள்ளவேண்டும். அங்குபோய்க் கற்கவேண்டுமென்றால் அங்குபோய் 7-8 மாதம் இதற்காக கழிக்கவேண்டும். அக்காலத்தில் சிலவாகும் பணமும் வியர்த்தமே. வேண்டிய சாதகங்களிருக்கும்போது இங்கேயே அப்பாஷையைக் கற்றுக்கொள்ளலா மன்றே. மேலும் ஜப்பானிய போதகாசிரியர்கள் தங்கள் பிரசங்கங்களில் ஜர்மன் பதங்களையும் இங்கிலீஷ்பதங்களையும் ஏராளமாக உபயோகிக்கின்றார்க ளாதலால் ஜர்மன் பாஷையும் கொஞ்சம் தெரிந்திருத்தல் நலம். இரண்டாவது. வித்தியார்த்திகள் இந்நாட்டை விட்டுப் புறப்படுமுன்னமே இன்ன விஷயத்தைப் பற்றித்தான் தாங்கள் கற்கவேண்டுமென்பதைத் தீர்மானித்துக் கொள்ளவேண்டும். இன்றேல் காரியம்கைகூடாது. மூன்றாவது. ஒவ்வொருவித்தியார்த்திக்கும் ஜப்பானில் குறைந்தது ரூபாய் எழுபத்தைந்து சிலவாகும். நான்காவது. பிரதி செப்டம்பர் மாதங்களிலும் ஒவ்வொருவகுப்பிற்கும் பாடங்கள் புதிதாய் ஆரம்பிக்கப்படும். ஆதலின் அப்போது வித்தியார்த்திகள் அங்கிருக்கவேண்டிய தவசியம்.கூடுமானால்இரண்டொருமாதத்திற்கு முன்னரேசென்றால் அக்காலத்தை அவர்கள்பாஷையை நன்கறிந்து கொள்வதற்கும் அவர்களின் நடையுடைபாவனைகளைத் தெரிந்துகொள்வதற்கும் பிரயோசனப்படுத்திக்கொள்ளலாம்.தற்காலம் ஜப்பானியருக்கும் ருஷியருக்கும் நடக்கும் கொடியயுத்தத்தில் இவ்வித்தியார்த்திகட்கு யாதொரு இடைஞ்சலும் உண்டாகாது. இன்னும் இவ்

விஷயத்தைப்பற்றி அதிகமாகத் தெரியவிரும்புவர்கள் ஜப்பானுக்குச் செல்லும் இந்திய வித்தியார்த்திகட்குப் புத்திபுகட்டி நல்வழிகாட்டுதலும் இந்தியருக்கும் ஜப்பானியருக்கும் உள்ள ஒற்றுமையை அதிகரிக்கச் செய்தலுமே நோக்கமாகக்கொண்டு சிலநாளைக்குமுன் டோக்கியோ நகரத்தில் ஸ்தாபிக்கப்பட்ட Indo-Japaneese Society யின் கௌரவ காரியதரிசியாகிய மிஸ்டர் G. N. பாட்தார் என்பவருக்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

---

## WHICH IS GREATER: LEARNING OR EXPERIENCE?

## படிப்புப்பெரிதா ? அநுபவம்பெரிதா ?

### மாதர் மனோரஞ்சினி.

---

மிஸ்டர். ஜி. சுப்பிரமணிய ஐயர், B. A. எழுதியது.

அறிவு படிப்பினாலும் அநுபோகத்தினாலும் அல்லது இரண்டினாலும் விருத்தியாகக்கூடியது. அந்நிய தேசங்களைப் போய் பார்த்திராதவர்களும் அந்நியர்களோடு பழகாதவர்களுங்கூடப் புஸ்தகங்களைப் படித்து அத்தேசங்களைப்பற்றியும் பல விஷயங்களை யறிந்துகொள்ளுகிறார்கள். ஆங்கிலேயர் வசிக்கும் இங்கிலண்டு தேசத்தை நம்மவர்களில் பெரும்பான்மையோர் பார்க்காதவர்களா யிருந்தபோதிலும்படிப்பினாலும்கேள்வியினாலும் அத்தேசத்தினுடைய இயற்கை இலக்ஷணங்களையும் ஜனங்களுடைய குணகுணங்களையும் இராஜாங்க முறைகளையும் தெரிந்துகொண் டிருக்கிறார்கள். அவ்வாறே உலகத்தில் எத்தேசங்களைப்பற்றியும் மேற்சொன்ன படிப்பு கேள்வி ஆகிய இவைகளால் விசேஷமாய் எவரும் தெரிந்துகொள்ளக்கூடும். ஆயினும் படிப்புகேள்வி இவைகளில்லாமலே அந்நிய தேசங்களில் யாத்திரைசெய்துஅங்கே அடையும் அநுபவத்தில் அவைகளைப்பற்றி அறிந்துகொள்ளவேண்டிய பல விஷயங்களை யறிந்துகொள்ளலாம். அறிவுக்கு உதவியாகிய படிப்பு அனுபவமாகிய இரண்டு சாதகங்களும் சிலருக்கு அருமையா யமைந்திருக்கின்றன. இந்தியர்கள் விசேஷமாய் தாங்கள் பிறந்த விடத்தைவிட்டு அந்நியஸ்தலங்களுக்குப்போய் சஞ்சரிக்கும் சுபாவ முடையவர்களல்லர். ஆகையால் அவர்களுக்கு அநுபோகத்தாற் கிடைக்கும் அறிவு குறைந்ததாகவே யிருக்கும்.

அறிவுக்குறிய இந்த இரண்டு சாதகங்களில் எது பெரிதென்று ஆலோசிக்கும்போது அநுபோகந்தான் பெரிதென்று சொல்லவேண்டும். நம்முடைய சமீபித்த பந்து ஒருவர் அந்நியதேசத்திற்குப் போயிருக்கையில் அவர் அங்கு நல்ல ஸ்திதியிலிருக்கிறாரென்று நமக்குத் தெரிந்து நாம் சந்தோஷப்

படக்கூடுமானாலும் அப்படி நல்ல ஸ்திதியிலிருப்பவனை நாம் கண்ணாற்பார்த்துக்கூடப் பழகினால் எவ்வளவு சந்தோஷப்படக்கூடுமோ அவ்வளவு கடிதமூலமாகச் சந்தோஷப்படுதல் கூடாது. அப்படியே கங்கைநதியில் காசிப்பட்டணம் வெகு நேர்த்தியா யிருக்கிறதென்று புஸ்தகத்தில் படித்தாலும் அல்லது ஒருவர் சொல்லக்கேட்டாலும் அதை நேரே போய்ப்பார்ப்பதால் உண்டாகிற உணர்ச்சி உண்டாகாது.

மேலும் அநேக விஷயங்களில் படிப்பினால் உண்டாகக்கூடிய அறிவானது அநுபவத்தில் பிரயோஜனப்பட்டாலொழிய அந்த அறிவு இருந்தாலும் இல்லாவிட்டாலும் ஒன்றேயாகும். சாஸ்திரங்களிலும் மற்ற நூல்களிலும் சத்தியம், தயை, சாந்தம் ஆகிய குணங்களைப்பற்றி புகழ்ந்து பேசியிருந்தாலும் அக்குணங்கள் அநுபவத்தில் காட்டப்பட்டா லொழியச் சிறக்கமாட்டா. மேலும் சித்திரமெழுதல், கட்டிடங்கள் கட்டுதல் முதலிய வித்தைகளைப்பற்றி ஒருவன் புஸ்தகத்தில் படித்ததை அநுபவத்தில் உபயோகித்தாலன்றி படித்ததினால் பிரயோசனமாகாது. அநேகர் கொஞ்சமேனும் படிப்பில்லாமலே உலகத்திற் கீர்த்தியடைந்திருக்கிறார்கள். 17-ம் நூற்றாண்டில் மகாராஷ்டிர ராஜியத்தை ஸ்தாபித்த சிவாஜி மஹாராஜ் சக்கிரபதி எழுத வாசிக்க அறியாதவராயிருந்தாலும் டெல்லியினை ஆண்ட மகம்மதிய சக்கிரவர்த்திகளது வல்லமையையும் பெருமையையும் ஒருவாறு அடக்க சாமர்த்திய முள்ளவராயிருந்தார். அவ்வாறே மைசூர் சமஸ்தானத்தை இந்து இராஜாக்களிடமிருந்து கைப்பற்றி ஆங்கிலேயர்களுடன் சரிசமானமாய்ப் போர்செய்த ஹைதர் ஆலிக்கு எழுத்து வாசனையே யில்லையென்று சொல்லப்படுகிறது.

இப்படிப் படிப்பைவிட அநுபோகம் பெரிதென்று சொல்வது புருஷர்களுக்கு மட்டுமல்ல ஸ்திரீகளுக்கு மொவ்வும். இந்து புராணங்களில் புகழப்படும் தமயந்தி, சீதை, திரௌபதி ஆகிய ஸ்திரீகள் பதிவிரதைகளாயும் தைரியசாலிகளாயும், விவேகமுள்ளவர்களாயுமிருந்த போதிலும் அவர்கள் புஸ்தகங்களை வாசித்து அக்குணங்களைப் பெற்றதாகச் சொல்லப்படவில்லை.

அவர்களுக்குச் சிறுபருவத்திலும், முதிர்ந்த பருவத்திலும் உண்டாயிருந்தசுதந்திரத்தால் கிடைத்த அநுபவத்தினாலேயே அவைகள் உண்டாயிருக்கவேண்டும். மகம்மதிய ஸ்திரீகளைப்போல் வீட்டுக்குள்ளேயே அடைபட்டிருக்கும் ஸ்திரீகளுக்கு அநுபவமுண்டாகி அதனால் புத்திவிசாலித்தல் சாத்தியமல்ல. ஐரோப்பிய ஸ்திரீகளைப்போலச் சுயேச்சையாய்ச் சஞ்சரிக்கும் ஸ்திரீகளுக்கு விசேஷப் படிப்பில்லாமற் போனாலும் அநுபவத்தினாலேயே விசேஷ அறிவு உண்டாகக்கூடும். தற்காலம் இந்துஸ்திரீகள் இரண்டுவகைகளிலும் சேராதவர்களாயிருக்கிறார்கள்.மகம்மதியஸ்திரீகளைப்போலவீட்டிற்குள் அடைபட்டிரா விட்டாலும் ஐரோப்பிய ஸ்திரீகளைப்போல சுயேச்சையாய் சஞ்

சரிக்கிறவர்களாயிருப்பதில்லை. அவ்விதம் சஞ்சரித்தல் நமது இந்து ஸ்திரீகளுக்கு நல்லதென்று நாம் சொல்ல வரவில்லை. அல்லது புருஷ சாதியோடு ஐரோப்பிய ஸ்திரீகளைப்போல நெருங்கிப் பழகவேண்டுமென்று சொல்ல வரவில்லை. ஆயினும் அமைதி, நாணம் முதலிய குணங்களை மீருமல் ஸ்திரீகள், ஸ்திரீகளுடனேபழகுதலும் அவர்களுடன் கூடிச்சஞ்சரித்தலும் ஸ்திரீகளுக்கு விரோதமென்று சொல்லக்கூடாது. உலகத்தில் கடவுள் சிருஷ்டிகளில் பலவேற்றுமைகளின் விநோதங்களையும் பார்த்து ஸ்திரீகள் அநுபவிப்பதில் என்னதடை யிருக்கக்கூடும்? மலைகள், ஆறுகள், அருவிகள், காடுகள் இவைகளையும், மிருகங்கள் பக்ஷிகள் முதலியவைகளையும், மரங்கள் புஷ்பங்கள் கொடிகள் முதலியவைகளையும் புருஷர்கள் கண்டு சந்தோஷப்படுவதைப்போல ஸ்திரீகளும் கண்டு ஏன் சந்தோஷப்படக்கூடாது? அவவாறே பற்பல ஸ்தலங்களைப் போய்ப் பார்த்து இதர ஜனங்களுடையநடை, உடை, பாவனைகளை அநுபோகத்தினல் தெரிந்து கொள்வதற்கும் தடை என்ன? இவ்விதம்ஸ்திரீகளுடைய அநுபோகத்தைப் பெருக்குவதில் பெற்றோர்களும் புருஷர்களும் சகாயம்செய்யக் கடமைப்பட்டவர்களென்பது நம் அபிப்பிராயம். இவைகளன்றி ஸ்திரீகள் சம்பாஷணை செய்வதில் அவர்களுடைய அபிப்பிராயங்களை வெளிப்படுத்துவதிலும், நியாயமான காரியங்களில் அவர்களுடைய விருப்பங்களை நிறைவேற்றிக் கொள்வதிலும், சுதந்தரம் கொடுப்பதும் அவசியம். இவ்வாறு ஸ்திரீகளுக்கு மிதமான சுதந்தரத்தைக் கொடுத்துக் கூடிய வரையில் அநுபவத்தை யுண்டாக்குவது அவர்களைவீட்டிற்குள்ளேயே யடைத்துப் புஸ்தகங்களை மாத்திரம் படிக்க இடங்கொடுப்பதைவிடப் பலமடங்கு பெரிதென்னும் நமது அபிப்பிராயத்தை இங்கு சொல்லத் துணிந்தோம்.

---

# Works by T. Ramakrishna.

**'Padmini.'**—An Indian Romance with an Introduction by the Right Hon'ble Dr. James Bryce, L.C. L., M. P. 'It is a veritable treasury of Hindu Folklore.' Price per copy Rs. 2-8-0.

**'Tales of Ind'** and other Poems—Rs. 2-8.

Copies can be had from The Secretary, *Madras Literary Bureau.*

---

## "THE TAMILS 1800 YEARS AGO."

**Rs. Five (5) only, Postage Extra.**

1. "The author gives a graphic account of the ancient geography of the land of the Tamils, their early commercial relations with foreign nations, the different peoples who spoke Tamil, the political history of the Tamils, and concludes with a brief vivid description of their social life, mode of warfare, literature, philosophy and religion. The chapter of Tamil poets and their poems displays the erudition of the author, and the extent of his research into the vast field of Tamil literature."—*The Madras Mail* (leader of the 13th May 1904).

2. "For a book of the kind the materials must be collected from various sources, and when they are collected they have to be so arranged that the lesson to be drawn and the narrative itself may be clear and of no doubtful import. Mr. Kanakasabhai has accomplished all this and he deserves to be congratulated on the success of his labours. He has rendered a public service of no small value."—*The Madras Standard.*

3. "The history of ancient India dealt with in this publication relates to as far back a period as A.D. 50, and covers nearly a century, in regard to which Mr. Kanakasabhai observes that the Sanskrit Literature is strongly poor, while a considerable portion of the Tamil Literature of that very period has come to us almost intact and reveals to us the condition not only of the Tamils, but also of other races who inhabited the rest of India in that remote age. * * * The book is altogether a unique publication of its kind and is an exhaustive history of a period in Southern India, in regard to which we have scarcely any authentic history, except the historical allusions scattered about in the pages of Tamil Works of Antiquity."—*The Madras Times.*

4. "The book will be welcomed as a valuable addition to the Library."—*The Times of Ceylon.*

For copies apply to the Secretary to the *Madras Literary Bureau* 8, Umpherson Street, Black Town, Madras.

---

## TAMIL BOOKS.

1. **'தென்னாட்டுச் சிரேட்டர்கள்'** (முதற்பாகம்—இதிலே ஒன்பதின்மர் ஜீவிய சரித்திரங்கள் அவரவர் திருவுருவப் படங்களுடன் நற்றமிழ் இனிய நடையில் எழுதப்பட்டுள்ளன. விலை அணா 12.

2. **'பன்னிருபெண்மணிகள்'**:—ஷேக்ஸ்பியர் நாடகமாதர்கள் இன்னோராவார் இதிலே பலவகைப்பட்ட பெண்மணிகளின் சரிதைகள் அடங்கியுள்ளன. பெண்பாலார்க்கு மேனாட்டுமாதர்சரிதம் புகட்டுதற் கேற்ற புத்தகம் இதுவே. ஒவ்வொருமாதும் கையில் எற்றுப்படித்துப் புத்தகப்பெட்டியிற் பதனப்படுத்தி வைக்கத்தகுந்த சிறந்த புத்தகம் இதுதான். விலை அணா 6.

3. **'விக்டோரியா மெய்க்கீர்த்தி'**:—விக்டோரியா மகாராணியார் மீது பாடப்பட்ட புகழ்மாலை இது. இதிலே அரியபெரிய செய்திகள் பலஅடங்கியுள்ளன. பிரபந்தம் அகவற்பாவால்அமைந்தது; விக்டோரியாவின் ஜனனமும், சரித்திரமும் நல்ல வசனத்தில் எழுதப்பட்டுள்ளன. இங்கிலீஷ் மொழிபெயர்ப்பு சகலத்திற்கும் உண்டு. பம்பாய்ஹைகோர்ட்டு ஜட்ஜி கனம் சந்திவர்க்கர் இதற்கோர் இங்கிலீஷ் பாயிரம் எழுதியுள்ளார். இதன் விலை அணா 12. புத்தகங்கள் வி. பி. ல். அனுப்பப்படும்.—

முற்குறித்த புத்தகங்களை வேண்டுவோர் மதராஸ் லிடரரி பூரோ செக்ரடரிக்கு எழுதிக்கொள்ளலாம்.

IN THE PRESS.

## *Will be Ready Immediately.*

A PRIMER OF

# 'TAMIL LITERATURE.'

The first attempt of its kind. It is a critical and historical Survey of Tamil Literature up to date. Price per copy Re. 1. To early Subscribers As. 12 only. Please register your name at the *Madras Literary Bureau*, Madras.

அச்சிலிருக்கின்றது.

## லலிதா ஸஹஸ்ர நாமம்.

இது பாஸ்கரராயர் மஹாபாஷிய சங்கிரகத்தோடு தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு அச்சேறி வருகின்றது. இது தேவி ஸ்தோத்திரம் ஆதலால் இதிலே தேவியின் ஓராயிர நாமங்களையும் பாஸ்கரராயர் பாஷியத்தோடு தமிழர் படித்து யோக இரகசியத்தையும், புராணகதைகளையும், மந்திர சாஸ்திரபாகங்களையும், மோக்ஷ வழிகளையும் நன்கு அறியலாம். இதன் விலை ரூ 2—0—0. இப்பொழுது பெயரைப் பதிவு செய்து கொள்பவர்களுக்கு ரூ 1—௮—0. உடனே மதராஸிலிருக்கும் மதராஸ் லிடரரி பூரோ செக்ரடரிக்கு எழுதிக்கொள்ளவும்.

---

# NEW BOOKS

## புத்தம் புதிய புத்தகங்கள்.

## இரசாயண சாஸ்திரம்.

(முதற்புத்தகம்)

விலை அணா ஆறு.

இது புத்தகத்திலே இராசாயண சாஸ்திரநுட்பங்களைப் பற்பல அழகிய படங்களோடு நன்கு விளக்கக்காட்டி இருக்கின்றது. நல்ல பளபளப்பான உயர்ந்த கடிதத்திலே நலமாக அச்சேறியுள்ள புத்தகம். சிறுவர், சிறுமியர், ஆகிய சகலருக்கும் பயன்படக் கூடியது.

## சத்திய விஜயம்.

இது அரிச்சந்திரன் திவ்விய சரித்திரம். நற்றமிழ் இனிய நடையில் எழுதப்பட்டுள்ளது. சத்தியமே மாந்தர்க்கு உயர்ந்த விரதமென்பதை விளக்கிக்காட்டு மொப்பற்ற திருமுறை இதுதான். விலை அணா 4.

வேண்டுவோர் உடனுக்குடனே எழுதவும். வி. பி. யில் அனுப்பப்படும். தபாற்கூலி வேறு.

செக்ரடரி

மதராஸ் லிடரரிபூரோ,

அம்பர்சன்வீதி, மதராஸ்.